

கிழ்ச்சி

1—10—1961

15 காசுகள்

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
1961
MADRAS

விருதுநகர்

ஸ்ரீ ராதாவில்

ஜெமினி கணேசன்,
வைஜயந்திமாலா,
கே. ஏ. தங்கவேலு,
எம். என். நம்பியார்,
எம். சரோஜா,
புதுமுகம் வசந்தி பி. ஏ.
மற்றும் பலர் நடித்த

சித்ராலயா அளிக்கும்
ஸ்ரீதரின்

தேன் நிலவு

30—9—61 முதல்
வெற்றிகரமாக
நடைபெறுகிறது

மகிழ்ச்சி

சீர்திருத்த மாத இதழ்

ஆசிரியர்: நா. சுதானந்தம்
விருதுநகர்

1961 அக்டோபர் 1
வள்ளுவராண்டு 1992-ஐப்பசி
ஆண்டு 13] [மாதம் 5

இதனுள்ளே:

......சாவித்திரி வேடம் 2
......தலைவர் அறிக்கை 4
......சிவாஜி கணேசன் உரை 5
என்னைப்பற்றி 6
என் துணைவர் 7
தமிழும் தமிழரும் 8
இதயஜோதி—பரிசுக்கதை 9
திருமணம் ஆகுமுன்
பரிசுக்கதை 13
புரையோடிய புண் 19
தோல்வியிலும் வெற்றிகண்ட
அஞ்சல்முறை 26
திரைப்படத் திறனாய்வு:
நல்லவன் வாழ்வான் 28
பாலும் பழமும் 29
திரைப்படப் பெயர்
நினைவுப் போட்டி 13 31

அட்டைப்படம்:
சாவித்திரி — கணேசன்

கதைகளில் வரும் பெயர்களும்,
சம்பவங்களும் கற்பனையே.

ஆண்டுச் சந்தா 1—80 தனி இதழ் 15 காசுகள்

சரீரத்தை விற்கும்பெண் சாவித்திரிவேடம்

218946

துறவிகள்என்று கூறும் மடாதிபதிகள், ஆதீனங்கள் போன்றோரின் அட்டகாசங்கள், ஆர்ப்பாட்டங்கள், ஆடம்பர வாழ்க்கைகள் குறித்து சுமார் எட்டுஆண்டுகளுக்கு முன்பே நாம் விபரமாகசெய்திகள் கொடுத்துள்ளோம். இப்போது சட்ட சபைக்கே வந்துவிட்டது அவர்களின் வண்டவாளம்.

தமிழ்நாடு சட்டசபையில் நில உச்சவரம்பு மசோதாமீது நடந்த சரத்துவாரி விவாதத்தின்போது **19-9-61** அன்று இரு காங்கிரஸ் பிரமுகர்கள் பேசிய பேச்சுக்கள் மிகவும் காரசாரமாகவும், கடுமையான தாக்குதல் நிறைந்ததாகவும் சென்னை 'தினச்செய்தி' தினப்பத்திரிகையில் வெளியாகி இருந்தது. கோவில், மடங்களுக்கு இந்த மசோதாவில் விலக்கு அளிக்கப்பட்டிருப்பதை எதிர்த்து அவர்கள் கூறிய கூற்றுக்கள் நம்மைக்கவர்ந்தது. அதையே நமது தலையங்கமாக இங்கே தருகிறோம்.

திரு. ஜி. நாராயணசாமி அவர்கள் கூறியதாவது:—

"மதத்தைக் காப்பாற்ற சொத்து வேண்டும் என்கிறார்கள். சமீபத்தில் மடங்களில் நடந்த கற்பழிப்பு கொலை எல்லோருக்கும் தெரியும்.

மனிதன் திடீரென்றுபணக்காரனானால் ஒருவிரல் இரண்டு விரல்களில்தான் மோதிரம்போடுவான். ஆனால் பண்டார சன்னதிகளோ பத்து விரல்களிலும் மோதிரம் போட்டுக்கொள்கிறார்கள். மடாதிபதியின்கழுத்தில் இருக்கின்ற மகர கண்டிகைமட்டும் பத்து லட்சம் ரூபாய் பெறும். மண்ணும் பொன்னும் கூடாது என்கிற பண்டார சன்னதி கையில் மண்ணையும், பொன்னையும் கொடுத்து அவர்களை விளையாட விட்டுவிட்டு மதத்தைக் காப்பாற்றுகிறோம் என்று சொல்வது பைத்தியக்காரத்தனமாகும். வேண்டுமானால் மடாதிபதி மாதத்திற்குஒருமுறை கைலாசத்திற்கோ மானசரோவருக்கோ போய்வரட்டும். அவர்கள் கையில் குடிமக்களை ஒப்படைக்கக்கூடாது.

நாம் வோட்டு வாங்கியது மக்களிடம்தான். மதமோ கடவுளோ வோட்டுப் போடவில்லை. நாம் மக்களின் வோட்டைப் பெற்றுத்தான் வந்திருக்கிறோம். மதத்தையும் மடாதிபதிகளையும் காப்பாற்றுகிறோம் என்று சொல்லி யாரும் தஞ்சை ஜில்லாவில் தேர்தலில் நின்றால் ஒருவோட்டுகூட கிடைக்காது. கோயில், மடங்களைக் காப்பாற்றுகிறேன் என்று சொல்லி யாராக இருந்தாலும் அங்கு தேர்தலில் நின்றால் அவர்களைத் தோற்கடிக்க நான் தயாராயிருக்கிறேன்.

சேக்கிழாரும், மாணிக்கவாசகரும் பக்திப் பிரசாரத்தைச் சொத்தினால் பரப்பவில்லை. விபூதிப் பையைக் கையில் வைத்துக் கொண்டு ஊர்ஊராகச் சுற்றி அவர்கள் கடவுள்நெறியைப் பரப்பினார்கள். ஆகவே, மண்ணும்பொன்

னும் பண்டாரசன்னதிக்கு இருந்தால்தான் கோயிலைக் காப்பாற்ற முடியும் என்பது மதத்தையே இழிவுபடுத்துகிறது. ஹிந்து மடத்துச் சோத்துக்கள், அதிக லாபத்திற்காகபிறமதஸ்தர்களுக்குத்தான் கொடுக்கப்படுகிறது. இப்படிப்பட்ட மடாதிபதிகளா ஹிந்துமதத்தைக் காப்பாற்றப்போகிறார்கள்? இந்த மடாதிபதிகள் மடங்களிடம் ஒரு துண்டுநிலம்கூட இல்லாமல் செய்யவேண்டும். கோயில், மடத்து நிலங்களில் வேண்டுமானால் அவர்கள் செலவைக் கொஞ்சம் அதிகரிக்கலாம். ஆனால் நிலத்தை அவர்கள் கையில் கொடுத்துவிடக் கூடாது. அப்படிக் கொடுத்தால் மிராசுதார் மனப்பான்மைதான் வளரும். இன்று மடங்கள் மதத்தை வளர்ப்பதாகவோ, ஒழுக்கத்தைப் போதிப்பதாகவோ இல்லை. மதங்கள் ஒழுக்கக்கேட்டை வளர்க்கும்பண்ணைகளாக இருக்கின்றன. கோயில், மடங்களிடம் நிலம் இருந்தால், அதைவிட வேறுஎதுவும் நமக்குத் தொந்தரவு கொடுப்பதாக இராது.

கோயில் காரியங்களைச் சர்க்காரே ஏற்றுக்கொள்ளவேண்டும். மடங்களின் கையில் நிலம் இருக்கக்கூடாது. அவர்களிடம் நிலம் கொடுத்தால் சரீரத்தை விற்கும் பெண் சாவித்திரி வேடம் போட்டு கற்புக்கு வாதாடுவது போன்றதாகி விடும்.

திரு. டி. ஆர். ராமாமிர்தத் தொண்டமான் பேசியதாவது:—

கடவுளுக்கும் மதத்திற்கும் நேர் விரோதமான துரோகச்செயல்களை மடங்களில் உள்ளவர்கள் செய்கிறார்கள். புனிதமான ஸ்தாபனங்கள் பக்திக்குஅப்பாற்பட்ட தீமைகளைச் செய்கின்றவர்களிடம் ஒப்படைக்கப்பட்டு இருக்கின்றன. மடங்களுக்கும் கோயில்களுக்கும் எந்தநோக்கத்தோடு தர்மங்களை அந்தக்காலத்தில் செய்தார்களோ அந்த நோக்கம் இப்போது நிறைவேறுவதில்லை. எல்லா தர்மவிதிகளையும் விட்டுவிட்டு ஏழைகளைச் சுரண்டி அனுபவித்துக்கொண்டு இருக்கிறார்கள். இதனால்தான் ஹிந்துமதத்திலிருந்து பலர் மதம்மாறநேரிட்டது.

கடவுள்பெயரால் மடத்துநிலத்தில் உழுகிற குடிமக்களை அடிக்க ஒவ்வொரு மடாதிபதியிடமும் ஏராளமான சாட்டைகள் இருக்கின்றன. ஆகவே, மடம் கோயில் நிலங்களைச் சர்க்காரே நேரடியாக எடுத்து கூட்டுறவு சாகுபடிமுறையைச் செய்யவேண்டும். அதன் நிர்வாகத்தை சர்க்காரே நேரடியாக ஏற்றுக்கொள்ளவேண்டும்.''

ஆட்சியில் இருப்பவர்கள் காங்கிரஸ்காரர்கள்; மசோதாகொண்டு வந்தவர்கள் காங்கிரஸ் மந்திரிகள். அதிலுள்ளபோத்தலை ஒளிவுமறைவின்றி எடுத்தியம்பிய மேற்கண்ட இரு காங்கிரஸ் பிரமுகர்களையும் பாராட்டுகிறோம். அவர்கள் கட்சியின் கட்டுப்பாட்டிற்கு உட்பட்டவர்கள் என்றபோதிலும், மனதில் தோன்றிய உண்மையை உரைத்தமைக்கு வாழ்த்துகிறோம். ★

மதுரை எழுத்தாளர் மன்றத் தலைவர் அறிக்கை

இந்தியத் தலைநகரில் மாநில முதலமைச்சர்கள் கூடிய மாநாட்டில் மாநில மொழிகளைத் தேவ நாகரிஎழுத்தில் எழுதுவதும்வெளியிடுவதும் செய்தல் வேண்டுமென முடிவு ஒன்று செய்யப்பட்டிருப்பதாகச் செய்தித் தாள்கள் வெளியிட்டிருப்பதைத் தமிழுலகம் மிக்க வருத்தத்தோடு அறிந்துள்ளது. அது செயற்படுமானல் பொதுவாக மாநில மொழிகளும், சிறப்பாகத் தமிழ் மொழியும் அழிந்துபோதும். பல்லாயிரம் ஆண்டுகளாக வழக்கிலிருந்துவரும் வரிவடிவங்களை ஒரு சிலரின் ஆதரவு நாடி அழிக்கக் கருதுவது மக்களாட்சி முறைக்கு நேர்மையும் மாநில அரசுகளுக்கு அறமும் பண்புமாகாது. பெரும்பான்மையான மக்கள் எழுத்தறிவின்றி இருப்பதைத் தமக்கு அரணாகக்கொண்டு ஆளும்கட்சியினர் எதேச்சையான கொடுமையைச் செய்யத் தலைப்படுவது பெரிதும் வருந்தத்தக்கதாவதோடு மக்கள் தங்கள்பால் வைத்த நன்மதிப்பையும்நம்பிக்கையையும் சூறையாடும் கொடுங்கோன்மையாக முடியும் என்பதை மதுரை எழுத்தாளர் மன்றம் பொருத்தற்கரிய வருத்தத்தோடு முதலமைச்சர்களை இத்தீச் செயலில் ஈடுபடாதபடி வேண்டிக் கொள்கிறது. அப்படி மீறிச் செய்வதாயின் ஒவ்வொரு எழுத்தாளரும், தமிழ் பேசும் தமிழ் மகனும் தமிழ்மகளும் அவர்களை எதிர்த்து நின்று நிகழ்த்தவிருக்கும் நேரடி நடவடிக்கைக்கு ஆயத்தமாக வேண்டும் என்பதையும் மதுரை எழுத்தாளர் மன்றம் பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறது.

ஔவை சு. துரைசாமி,
மன்றத் தலைவர்.
மதுரை, 3—9—61.

தேவநாகரி!

தேவநாகரியை இந்தியாவில் பொது எழுத்தாக வைத்துக் கொண்டால் நல்லது என்று நாங்கள் அபிப்பிராயப்படுகிறேம் கருத்தை மக்கள் மனதில் போட்டு வைத்திருக்கிறேம். அதற்காக எந்த நடவடிக்கையையும் நாங்கள் எடுத்துவிடவில்லை. வலுக்கட்டாயமாகத் திணிக்கவும் விரும்பவில்லை.

—நேரு

ஹாமர்ஷீல்ட் மறைவு!

ஆப்பிரிக்காவிலுள்ள லியோபால்டுவிலிருந்து 18—9—61 அன்று ஐக்கிய நாடுகளின் பொதுச்செயலாளர் குழுவினர் சென்ற விமானம் விபத்திற்குள்ளாகி, அனைவரும் மரணமெய்தின செய்தி உலகையே துக்கத்தில்ஆழ்த்தியுள்ளது. இயற்கை விபத்தா அல்லது நாசவேலையா என்பது இன்னும் அறியப்படவில்லை என்றும் தெரிகிறது.

தமிழ் தேசிய கட்சி மாநாட்டில்

சிவாஜி கணேசன் உரை

18 ஆண்டு காலமாக எனக்கும் சம்பத்துக்கும் நெருங்கிய பழக்க முண்டு. இப்போது கட்சி என்ருல் பணம் சம்பாதிக்கத்தான் என்ற கருத்து சிலரிடையே இருக்கிறது. ஆனல் சம்பத் (சிரிப்பு) தமது பணத்தைஎல்லாம் இழந்து தியாகம் செய்து தமிழ்நாட்டுக்காக பாடுபடுவதற்காக வாழ்த்துகிறேன். சம்பத்தை ஒருநடிகர் என்ருர்கள். நான் ரசிகன். அவர் கலைத்துறையில் நுழைந்திருந்தால் இன்று பெரிய நடிகர்கள் என்று கூறிக் கொள்கிறவர்கள் இருந்திருப்பார்களோ என்னவோ! (பலத்த சிரிப்பு) கலையையும், அரசியலையும் குழப்பக்கூடாது. கலைஞர்கள் அரசியலில் பார்வையாளர்களாக இருக்க வேண்டுமேதவிர, சம்பத்தைப்போல் தலைவர்கள் ஆக முயலக்கூடாது. (கரகோஷம்)

கலைஞர்களை வைத்துக் கட்சி நடத்தும் எண்ணமோ, கலைஞர்களை வைத்து சம்பாதிக்கவேண்டுமென்றஎண்ணமோ சம்பத்துக்குக் கிடையாது. (கைதட்டல்)

கலைஞர்களால் அரசியலில் ஏற்பட்ட குழப்பங்களை அண்மையில் கண்டோம். (ஆரவாரம் கைதட்டல்) கலைஞர்கள் வைரம்போன்றவர்கள்; வைரத்தைக்கொண்டு நெக்லஸ்செய்யலாமேதவிர அதை வைத்து அணைகட்ட முடியாது. அவர்கள் தங்கவாள் போன்றவர்கள்; அதை வைத்து சண்டை போடமுடியாது. அவர்கள் குத்து விளக்குப் போன்றவர்கள்; அரசியல்கப்பலுக்கு அவர்கள்கலங்கரை விளக்காக இருக்கமுடியாது. அவர்கள் கவர்ச்சியானவர்கள்; கண்ணைக் கவரக்கூடியவர்கள்.

கலைஞர் வந்துவிட்டால் அவரையே கவனிப்பார்கள் மக்கள். அதே கூட்டத்தில் நாட்டு முன்னேற்றத்திற்காக ஒரு பொருளாதாரத் திட்டத்தை விளக்கும் தலைவரின்கதி என்ன ஆகும்? மக்கள் கலைஞனிடம்தானே கவனத்தைச் செலுத்துவார்கள்! நாங்கள் கலைஞர்களாகவே இருந்து நாட்டின் நலனுக்காகப் பாடுபடுவோம். பாரதியாரும், தாகூரும் தலைவர்கள் ஆகவில்லை. கவிஞர்களாகவே இருந்து நாட்டுக்கும் பணிபுரிந்தார்கள். ஒரு கலைஞர் அரசியல் தலைவராக ஆவதற்கு எந்த நாட்டிலும் விரும்பவில்லை. சின்னப்பா காமராஜ ஆகவோ, பாகவதர் பெரியாராகவோ, கணேசன் சம்பத்தாகவோ ஆகக் கனவு கண்டதில்லை.

சம்பத்தைத் தலைவராகக் கொண்ட இந்தக் கட்சி வாழ்க என்று கூறிக்கொள்கிறேன்.

—நவசக்தி 19—9—61

என்னைப்பற்றி (5)

வை. பஞ்சாபகேசன், 990, வடக்கு 3ம் வீதி, புதுக்கோட்டை.



என்னுடைய முதல்கதை 'பாக்கியசாலி' தினமணி (ஞாயிறுமலர்) சுடர்ப்பகுதியில் முதன்முதல் 26-8-60ல் வெளியாயிற்று.

அதற்குமுன்பு என்னைத்தேடி வந்தகதைகள் கணக்கிலே அடங்காது. அதனால் நான் மனம் கலங்கவில்லை. நான் அனுப்பியிருந்த கதைகள் என்னிடமே திரும்பித்திரும்பி ஓடிவருகின்ற காரணத்தை நான் என்னுள்ளே எண்ணியபோதுதான் அதன் உண்மைநிலைபுலனாயிற்று. நான் எழுதியனுப்பின கதைகளில் எல்லாவற்றிலுமே கருத்தில்லை.

அன்றுமுதல் நான் நிறையப் படிக்க ஆரம்பித்தேன். இன்று நம்மிடையே நடமாடுந்தெய்வங்களாக நல்லகதைகளையும், கருத்துள்ளகட்டுரைகளையும் படைத்து மனித சமுதாயம் வளர வழி வகுக்கும் திரு. அகிலன் அவர்களும், டாக்டர் மு. வரதராசனார் அவர்களும் என்னை வாழவைத்தவர்கள்.

எங்களூர் செல்வம் திரு. அகிலனின் 'பெண்களைப்பற்றி' அவர்களின் தூய எண்ணம் எப்படி என்பதுபற்றி வரைந்த நூல்கள் காதலின் திறத்தை எனக்குப் புகட்டின. அதேநேரம் டாக்டர் மு. வ. அவர்களின் நல்ல கருத்துக்கள் தியாக உருவில் நின்ற குமரனை எனக்குக் காட்டியது.

கேள்வி—பதில் பகுதியில் எனது கேள்விகள் இடம்பெற்றன. பின் பொங்கல் மலரில் 'பண்பும் நேசமும்' என்ற சிறுகதையும், இந்த ஆனிமாத இதழில் 'இலக்கியம்' என்ற கட்டுரையும் வெளியாகியுள்ளது.

தங்கவிளக்கு ஆயினும் அதை திரியிட்டு எண்ணெய் வார்த்து தீபமாக ஒளியேற்றும் பெருமை 'மகிழ்ச்சி'க்குத்தான் உண்டு. காரணம் மனிதன் உலகில் பிறப்பது இயற்கை. அவனை வெளிஉலகில் அறிமுகப்படுத்துவது ஒரு தனிச்சிறப்புதானே!

என் துணைவர் (என்னைப்பற்றி 6)

சரோஜா மாணிக்கம், குனியமுத்தூர்—கோவை.

'மகிழ்ச்சி'யில் 'என்னைப்பற்றி' என்ற தலைப்பில் செய்தி எழுதி அனுப்பிட விழைந்த வேளை; என் துணைவர் நீண்ட காலமாகவே மகிழ்ச்சியோடு தொடர்பு கொண்டவர்—எங்களது இல்லத்திற்கு வரும் பத்திரிகைகளில் முக்கியத்துவம் கொண்ட இதழ்களில் ஒன்று; ஆகவே தாங்களும் எழுதுங்கள் என்றேன். 'என்னைப்பற்றி' நான் எழுதி 'மகிழ்ச்சி' நேயர்கள் அறிந்துகொள்ள வேண்டிய நிலையில் நான் இல்லை என மறுத்துவிட்டார்.

'மகிழ்ச்சியில் மகளிர் பகுதி வேண்டும்' என எண்ணும் என் அத்தானின் எண்ணம் நிறைவு பெறவும், அவரைப்பற்றி நான் சொல்லவும் மகிழ்ச்சி வழிசெய்கிறது—நன்றி

1951ம் ஆண்டு அவர் என்னை துணைவியாகத் தேர்ந்தெடுத்தார். அன்றிலிருந்து இன்றுவரை நான் அவரிடம்—என் மனநிறைவு பெறும்வரை மகிழ்ந்து பேசிய நேரத்தை அதிகப்படுத்திட முயலுகிறேன்; முடிவதில்லை. அவரது இதயத்தில் எனக்குக் கொடுத்திருக்கும் இட அளவைவிட, நாட்டுப்பணியில் அவர் கொண்டுள்ள நாட்டம் மிகப்பெரிது

மகிழ்ச்சி, கிளர்ச்சி, திராவிடன், திராவிட நாடு, மக்களாட்சி, குடியரசு ஆகிய பத்திரிகைகளில் அவ்வப்போது சிறுகதை, கட்டுரைகள் எழுதுவார். இப்பொழுதும் எழுதுங்கள் எழுதுங்கள் என்பேன். அதற்கு அவருக்கு நேரமேது? விடிந்தால் நண்பர்கள் குழாம் கூடிக்கொள்ளும், இரவு 12 மணி —1 மணி. அத்தனைபேருக்கும் நான் வேண்டிய சுவைநீர்—உண்டி பரிமாறிட வேண்டும். அத்தோடு தி.மு.க.வின் தலைவர்கள் பலரது குடும்ப நண்பர். அவர்களும் எங்களது இல்லத்திற்கு வருவர், நாங்களும் அவர்களது இல்லத்திற்குச் செல்வோம்.

நாங்கள் ஒரு சிறு உணவு விடுதி நடத்தினோம். என் அத்தானின் நண்பர்களே கடையை மூடச்செய்துவிட்டார்கள்; தண்ணீர்ப்பந்தலைப்போன்று, எல்லோருக்கும் சொந்தமாகிவிட்டது...?!

என் அத்தான் தமிழ்மேல் கொண்ட பற்றினுக்கு எடுத்துக்காட்டு, என்பெயர் 'சரோஜா' என்பது வடசொல்லாம், எனவே அதன் தமிழாக்கம் தாமரை—மூத்த பெண் குழந்தைக்குப் பெயர் செந்தாமரை என்று வைத்துள்ளார், நாஞ்சில் திரு. கி. மனோகரனை அழைத்து.

அவருக்குப் பிடித்தமானவை களில் மலர்களின் மணத்தை நுகர்வதும். எனவே, எங்களது அடுத்த குழந்தைகளுக்கு முல்லை, அல்லி என்றும், அவர் தம்பியின் குழந்தைக்கு 'செண்பகம்' என்றும் வைத்து எங்களது வீட்டையே பூங்காவாக்கி விட்டார். வரும் நண்பர்கள் இதனைக்கூறி நகைப்பர். சிலர் 'எங்கே எப்மலரும் மணம்வீசக் காணோமே?' என்பர். அப்படி யென்றால் குழந்தைகளின் குரல் ஒலியைக் காணோமே என்பது பொருளாம். எங்களது வீடு ஓரே மகிழ்ச்சிப் பூக்காடுதான்!

சாதி ஒழிப்புப்பற்றி திரு. சப்பத் மாநாட்டு வேண்டுகோள்!

பொது நிறுவனங்களின் பெயர்ப் பலகைகளில் சாதிப்பெயர் இருக்கக்கூடாது என்றும், அரசாங்கப் பணிமனையில் வேலை செய்வோர் சாதிப்பெயர் போட்டுக்கொள்வதைத் தடைசெய்யும் அளவில் தக்க சட்டங்களைக் கொண்டுவரும் படியும் தமிழக அரசாங்கத்தை இம்மாநாடு கேட்டுக்கொண்டது.

கலப்பு மணம் செய்துகொண்டவர்களுக்கும், அவர்களின் குழந்தைகளுக்கும் படிப்பிலும் உத்தியோகத்திலும் விசேஷசலுகைகள் வழங்கப்படவேண்டும் என்றும் அரசியலாரை இம்மாநாடுகேட்டுக் கொண்டது.

தமிழும் தமிழரும்

[இரா. இராமதாசன்–பரம்பை]

அன்பும் அறிவும்
ஒன்றுறச் செய்வாய்
பண்பும் பரிவும்
நன்றெனக் காண்பாய்
உண்மையும் ஒழுக்கமும்
உயிரெனக் கொள்வாய்
கண்ணியம் கடமை
கருத்தினில் வைப்பாய்

தமிழும் தமிழனும்
தரணியில் தழைக்க
அமிழ்தத் தமிழை
ஆராய்ந் தறிந்து
குவிந்து கிடக்கும்
கலைச்செல் வத்தை
தாரணி எங்கனும்
தழைக்கச் செய்வாய்

திராவிடம் என்னும்
திருவுடைப் பெயரினை
தராதலம் எங்கும்
தளிர்க்கச் செய்தாய்
வாராய் வாராய்
வண்டமிழ்த் தாயே
தாராய் தாராய்
தண்டமிழ்ச் சுவையே

முந்தையர் போற்றிய
முத்தமிழ் அணங்கே
சந்தக் கவிகள்
சார்ந்த நல்லமுதே
வந்தவர் வாழ
வளர்தரு தமிழே!
உந்தனை மறவேன்
என்றும் நானே!

ஊராரின் கேலிப் பேச்சுக்கு இடங்கொடாமலிருக்க பெண்ணைப் பெற்றவர்கள் தங்கள் தகுதிக்கு மீறியபடி கடன்வாங்கியாவது கஷ்டப்பட்டாவது மாப்பிள்ளையின் மனதை மகிழ்ச்சிப்படுத்துகிறார்கள்.........

பரிசுக் கதை

இதயஜோதி

[இரா. செல்லத்துரை—மதுரை]

"இதயஜோதி! இதயஜோதி!"

"........................"

"பேசமாட்டாயா? ஏன்?"

தலையணைக்குள் முகத்தைப் புதைத்துக்கொண்டு குப்புறப் படுத்துக்கொண்டாள் இதயஜோதி.

"உனக்கு கோபமும்வருமா?" பதில் இல்லை!

"திரும்பித்தான் பாரேன்!" அசையவில்லை அவள்.

"சரி! நான் போகிறேன்!" கூறியபடி மெல்ல எழுந்தான்.

முழுமதிமுகத்தைத் திருப்பி ஓர விழிகளால் பார்த்தாள்! 'என்னைவிட்டுஎப்படிப்போய்விடுவீர்கள்' என்று அந்தச் சின்ன மலர்விழிகள் அவனைக்கேட்டன!

"கொவ்வைக்கனி இதழ்களா இவை?" குறும்புடன்கேட்டான் அவள் கணவன் இனியன்.

"ஏன்? கொத்தித்தான்பார்க்கவேண்டுமோ?" குரலில்கோபத்தைக் காட்டினாள்.

எழுந்தவன் அவள் அருகில் அமளியில் அமர்ந்தபடியே, "தளிர்உடல் ஏன்இப்படித்தணலாகத் தகிக்கிறது?" என்றான்.

"அனலாகவுமில்லை! தணலாகவுமில்லை!"

"கோபத்திற்கான காரணத்தைக் கூறினால்தானே தெரியும்!"

"சொன்னால்தான் உங்களுக்குத் தெரியுமோ?"

"சொல்லாமல் தெரிவதற்கு இது என்ன......"

"சரி! சரி! போதும்! வாயை மூடிக்கொண்டு......"

அவள் முடிக்கவில்லை! அவள் விழிகளில் அவன் உருவத்தைப் பார்ப்பதுபோல நெருங்கினான். விலகியபடியே அவன்விரல்களைப் பற்றிக்கொண்டாள் இதயஜோதி

"ஏன் இந்த வாடலும் ஊடலும்" அவன்விழிகள் அவளிடம் கேட்டன.

"இதயா...இதயா..." கீழேயிருந்து அழைப்பு வந்தது.

"மாமி அழைக்கிறார்கள்! இருங்கள் வந்துவிடுகிறேன்" இடையைச் சரிசெய்து இறங்கினாள் கீழே!

காய்ச்சிய பாலைக் கைகளில் ஏந்தியபடிநின்ற மாமியிடமிருந்து பாலைவாங்கிக்கொண்டுபூவின் மெல்லிய பாதம் நோக மாடிக்குப் போனாள்.

பாலைப் பருகினான்! பாதியை பாவைக்களித்தான்! அருகில் அமர்ந்த நுண்ணிடையாளின் மென்கரம்பிடித்து முன் இருத்தி முகம் நோக்கி, விழிகளுக்குள் வீற்றிருந்த உருவம் நோக்கி, ஆர்வத்தால் துடித்த அதரங்கள் அசைய "இதயஜோதி" என்றான்

இதயம் மகிழ்ச்சியால் பூரிக்க, பற்றியகரம் மென்கழுத்தை வளைக்க, இதழோரத்தில் இள நகைமின்ன "ஊஹூம்...முடியாது!" என்றாள்.

"என்ன முடியாது? உன்னை நான்என்னகேட்டேன்? முடியாதென்கிறாய்?" என்றான் இனியன்

கூந்தலில்மணக்கும் மல்லிகை மணம் சுழன்றுவரும் தென்றலில் கலந்துவந்து அவனை மெய் மறக்கச்செய்தது.

நெஞ்சிலே பொங்கும் ஆசை புன்னகையாய் வெளியில்வர, "என்னைக்கேட்டால் முடியாது என்றா சொல்வேன்?" என்றாள் இதயஜோதி.

"வேறு யாரிடம் நான் என்ன கேட்டேன்!"

"என் அப்பாவிடம் அல்லவா நீங்கள் கேட்கிறீர்கள்!"

"குளிர்நிலவின் கோபத்துக்கு அதுதான் காரணமா? என் இதயஜோதியே! நான் என்ன செய்வது? உன் மாமியின் ஆசை உன்னுடைய அப்பா என்கைக்கு கடிகாரம் கட்டவேண்டும் என்பது! தீபாவளிப் பரிசாக, தங்கச் சங்கிலியில் கைக்கடிகாரம் கட்டிவரவேண்டுமென்று என் பெற்றோர் என்னைத் தொல்லைப் படுத்துகிறார்களே!"

"நீங்கள் சின்ன பாப்பாவா? அவர்களிடமே கூறக்கூடாதா? என்னிடத்தில் வந்து கொஞ்சுகிறீர்களே! உன் புன்னகை போதுமே! உனக்குப் பொன் நகைவேறு வேண்டுமா? அந்த நகைச்சுமை வேண்டாமே! உன் நகைச்சுவைப்பேச்சு போதுமே! என்னைச் சுவைக்கடலில் தள்ள! தங்கம் இல்லாவிட்டாலும் உன் அங்கங்கள் பொன்போல் ஒளி வீசுகின்றனவே! நெஞ்சிலே இருக்கும் நெக்லஸில் வைரம் இல்லாவிட்டால் என்ன? வைர நெஞ்சத்தையுடையவள் அல்லவா நீ! என்றெல்லாம் கொஞ்சியும் கெஞ்சியும் குளிர்ச்சியூட்டிக் குதூகலப்படுத்துகிறீர்கள்! ஆனால் என் அத்தையின் முன்னால் 'நகைப்பைத்தியம் ஆகாது' என்று கூறமுடியாமல் ஆமை போல் அடங்கிவிடுகிறீர்களே!" என்றாள் இதயஜோதி அவன் இதயத்தில் கன்னத்தை வைத்தபடி!

"உனக்குத் தெரியாது இதயஜோதி! உன்னைநான்மாலையிட்டு மனைவியாக்கிக்கொள்ள நான் பட்ட கஷ்டம்! கூறிய கார

ண்ங்கள்! கொண்ட நினைவுகள் வெடித்த வேதனைகள்!!

"என்பெரியண்ணு சொன்னூர் 'மாங்குளம் பெண் மங்களத்தை மணந்துகொண்டால் நகையும், பணம்இரண்டாயிரமும் கிடைக்கும்! ஏ ரி யூ ர் எல்லப்பர் தன் ஏகபுத்திரியை உனக்குக்கொடுக்க ஏக்கமுடன் காத்து நிற்கிறூர்! பஞ்சு வியாபாரியின் பிரியமகள் பஞ்சவர்ணம் ஓரேவர்ணம்தான் சிவப்பு! அ வ ளை நீ கட்டிக் கொண்டாயானுல்......'

'மெ த் தை க ள் தைத்துக் கொடுப்பார்!' இடைமறித்தேன்.

'இரும்புவியாபாரிமகள் இதய ஜோதியை மணந்துகொண்டால் உனக்கு என்னகிடைக்கப்போகிறது?' அவர் கேட்டார்!

"அறிவுடன் க ல ந் த அழகு கிடைக்கும்! அதுமட்டுமல்ல! அந்த அழகுடன் நாணம் என்ற பண்புகலந்துவிளங்கும்! பொன் அதிகம்கிடைக்காதுதான்! என்னைக் கண்போல் காக்கும் பெண் கிடைப்பாள்!

படிக்காதஅசடாக இல்லாமல் கற்றகர்வமும்இல்லாமல் கருணையுள்ளத்தோடு கலங்கமில்லாத இதயத்தோடு இல்லற ஜோதியாக விளங்குவாள் என் இதய ஜோதி! அ வ ளை மறுக்கவோ, மறக்கவோ துணிவில்லைஎனக்கு! எண்ணித் துணிந்தேன்! இனி எண்ணுவது என்பது இழுக்கு"

"இறுதியில்தான் இசைந்தார்கள் இந்த இன்பச் செல்வியை இல்லறச் செல்வியாக்கிக்கொள்ள" இதயஜோதியின்கன்னத்தில் கன்னம்பட இதைக் கூறினுன் இனியன்.

அப்போது அவள் இ த ய ம் மகிழ்ச்சிப் பெருக்கால் இ ன் ப உணர்வால் பூரித்தது! தளிர்க் கரங்களால் அ வ ன் கரங்களைப் பற்றிக் கண்களில்ஒற்றிக்கொண்டாள்! அவள் உ ள் ள த் து உணர்ச்சி உவகையாக மாறிக் கண்களில் பிரகாசித்தது!

"சுழலும் இருகுமுதவிழிகள் ஆப்பிள்நிறஅதரங்களின் அசைவில்வரும் ஆசைமொழிகள், பளபளக்கும்மாம்பழக்கன்னங்களில் விழும் அழகுக் 'குழி' அ ன் பு கொ ண் டு அணைக்கும் அழகுக் கரங்கள், பொங்கும் மகிழ்ச்சியையும் இ ன் ப உணர்வினையும் எழுப்பி துன்பத்தையும்மாற்றும் சிரிக்கும்மலர்போல், குளிர்விரிக்கும்நிலவுபோல்உள்ள உன்முகம் ---இவைகள்போதுமே எனக்கு! வேறு என்னவேண்டும்?"

"தங்கச்சங்கிலியில் இணைத்த கடிகாரம் வேண்டும்! அப்படித் தானே அத்தான்!"

"தலைத்தீபாவளிக்கு மாமனூர் என்ன பரிசு கொடுத்தார் என்று பெற்றேர் மட்டுமல்ல, உற்றூர் உறவினர் மட்டுமல்ல, ஊரிலும் பலர் கேட்கும் பழைய பழக்கம் இன்னும் மாறவில்லை!"

"ஊராரின் கேலிப் பேச்சுக்கு இடம் கொடாமலிருக்க பெண்ணைப் பெற்றவர்கள் தங்கள்தகு

திக்குமீறியபடி கடன் வாங்கியாவது கஷ்டப்பட்டாவதுமாப் பிள்ளையின் மனதை மகிழ்ச்சிப் படுத்துகிறார்கள். வந்த பணத்தை வைக்கும் வழி தெரியாமல் எந்த நகை வாங்கலாம் என்று தேடியலையும் பணக்காரர்களின் படாடோபமான பரிசளிப்பைப் பார்த்துவிட்டு ஏழைகளும் அம் மாதிரி செய்ய எண்ணினால் துன்பம்தானே!''

"என் மனம் நீ அறியாயா ஜோதி! கார் கட்டணத்தைக் காம்நீட்டி அவரிடம் வாங்கவே கைகூசும் இதயம்கொண்ட நானா உன் தந்தையின் உள்ளம் வாட மனம்நோகச் செய்வேன்!''

"உங்கள் பொன்னனகரத்தை பொன்னலான கடிகாரம் அழகு படுத்துவதைக் காணும் ஆசை எனக்குமட்டும் இல்லையா அத்தான்? ஆசை இருக்கிறது அதிகமாக! வசதிவேண்டாமா? வளமான வாழ்வு நமக்கு வரும் போது வாங்கி மகிழ்வோமே! உங்கள் கரத்திலே கடிகாரம் காலம் காட்ட, என் பெற்றோர் கருத்திலே கவலை வாட்டவேண்டாம் என்றுதான் கூறுகிறேன்''

"இதயத்தை இசையச்செய்ய இனிமையாகப் பேசுகிறாயே! இந்த இனியனின் இதயம்மட்டும் இளகாமலிருக்குமா?'' சிரித்தபடி கேட்டான்!

"நான்கூறினல் கோபம்கொள்ளமாட்டீர்களே!''

"குறைமதியாளனல்லவே நான்''

"நாங்கள் தீபாவளி கொண்டாடுவதில்லை! பொங்கல்தான் எங்கள் திருவிழா! புன்னகையும் புத்தாடையும் பூரிப்பும் அன்றுதான்! தீபாவளிக்கு வரவில்லையென்று வருந்தாதீர்கள்!—இவ்வாறு உங்கள் மாமாவுக்குக் கடிதம் எழுதிவிடுங்கள்'' என்றாள் இதயஜோதி.

"சீர்திருத்த இதழ்கள் படிக்கிறாய் என்பது தெரிகிறது! நீ இவ்வளவு அருங்குணவதியாக இருப்பாய் என நான் கனவிலும் கருதவில்லை!'' என்றான் இனியன்.

"இரக்கமுள்ள இதயமும், பிறர் துன்பம் கண்டு கலங்கும் கண்களும், ஆடம்பரமில்லா வாழ்வும், ஆத்திரம் கொள்ளா உள்ளமும், அனுப்பொழுதும் என்னைவிட்டகலா அன்பும் கொண்ட நீங்கள் என் வாழ்வின் வழிகாட்டியாக வந்துவாய்த்தது யான்செய்த நல்வினைப்பயனே!'' ஆனந்தக் கண்ணீர் மல்கக் கூறினாள் இதயஜோதி.

உள்ளங்கள் இரண்டும் உவகையால் ஒன்றிட, நெஞ்சங்கள் இரண்டும் இனிய நினைவுகளால் நிரம்ப, உடலிரண்டு ஒன்றெனஉறவுகொண்டு, உணர்வுமயங்கி, உயிர்கலந்து உல்லாச மயக்கத்தில் மயங்கி, அழகு வாடாத தாமரை முகத்தின் அமுதக் கலசங்களைத் தாங்கிய செந்தேனிதழ்கள் மல்லிகை மலரிதழ் போல் வெளுக்க—கீழ்வானமும் வெளுத்தது! ★

இளமை குன்றவில்லை. அழகு குறையவில்லை.
இன்பம் அனுபவிக்கும் ஆசை அடங்கவில்லை.
வாழவேண்டும் என்ற எண்ணம் அழியவில்லை.
எப்படி வாழ்வாள் அல்லி.

* பரிசுக்கதை *

திருமணம் ஆகுமுன்..

[பொன்னி—நாகபாளையம்]

பூரண போற்குடம் வைத்துத் தோரணங்களால் அலங்கரிக்கப் பட்டிருந்தது மண இல்லம். பாளை, கமுகு இவைகள் மண மேடையை அலங்கரித்தன. எங்கும் இளமங்கையர் வண்ணாத்திப் பூச்சிபோன்று அலைந்துகொண்டு இருந்தனர். எங்கனும் கலகலப்பு —புன்சிரிப்பு.

மத்தளம்கோட்டியது. நல்லார் வாழ்த்துக் கூறினர். மணமகன் காப்புநாணை மணமகளின் கழுத்திலே கட்டி அவள் கைத்தலம் பற்றினான்.

வாழ்க்கைஎன்னும்நீலவானிலே நோக்கம்ஏதுமின்றித்தனித்தனியே பறந்துகொண்டிருந்த இரண்டு வண்ணப் புறுக்களைப் பிடித்து அவைகளுக்குத் தங்கக் கூண்டு கட்டிவிட்டனர் பெரியோர். இனி அவை இன்பத்திலும் துன்பத்திலும்இணைந்துதான்வாழவேண்டும்

ஆண்புரு கதிரவன்! பேண்புரு தாமரை!

கதிரவன் வரவுகண்டு தாமரை மலர்வதுபோல் தன் கைத்தலம் பற்றிய கதிரவனின் தோற்றம் கண்டு மகிழ்ந்திருந்தாள் மங்கை தாமரை.

தாமரை, கதிரவனின் வரவு கண்டு மலர்வதும், மறைவுகண்டு கூம்புவதும் எப்படி இயற்கையோ அவ்வண்ணமே தாமரை—கதிரவன் இவர்கள் வாழ்விலே இன்பமும் துன்பமும்.

தாமரை! மின்னொத்த நுண் இடையினள்; கன்னல்போல் இன்மொழியினள்; கெண்டை ஒண்கண் மடவாள்; கருமலர்க் கூந்தலாள்.

கதிரவன்! எவரும்இச்சிக்கும் கம்பீரத்தோற்றம்; மலர்ந்தமுகம்; பரந்து விரிந்த நெஞ்சம்.

மணவினை முடிந்தது. கதிரவன் தன் வீட்டின் ஒரு மூலையில் இருந்த சிறு அறை ஒன்றினை அடைந்தான். ''அண்ணி!''

''யார், கதிரவனா? வாருங்கள்'' தேனினுமினிய குரலில் மணமகனை வரவேற்ற கதிரவன் அண்ணியார் வெளியே வந்தார்கள்.

''என் திருமணம் முடிந்துவிட்டது'' மகிழ்ச்சியுடன் ஒலித்தது கதிரவனின் குரல்.

"மிக்க மகிழ்ச்சி. உங்கள் வாழ்வு வளமார் சோலைபோல் தழைக்கட்டும்! மணம் கமழட்டும்! இன்பம் பெருகட்டும்!"

"வாழ்த்துகிறீர்களா? வாழ்த்துங்கள். பாவம்! வேறென்னசெய்ய முடியும். மற்றவர்களை வாழ்த்தியாவதுஉங்கள்வாய்மணக்கட்டும்"

"கதிரவன்..."

"அண்ணி, நீங்கள் மட்டும் மனம் வைத்திருந்தால்......"

"கதிரவன், என்னைச் சொல்லால் கொல்லாதீர்கள். ஏற்கனவே நான் அணுஅணுவாகச் செத்துக்கொண்டிருக்கிறேன். கருகிய செடியில் வெண்ணீர் ஊற்றிய போன்று என்னை என்துன்புறுத்துகிறீர்கள்"

"அண்ணி! துன்பப்படுகிறீர்களா? ஆம் விதவையான நீங்கள் துன்பப்படாமல் இன்பமாகவா வாழமுடியும். விதவையான உங்களுக்கேது இன்ப வாழ்வு. உங்கள் இழந்த வாழ்வை—இன்பத்தைத் திருப்பித்தரஎண்ணினேன். மறுத்துவிட்டீர்கள். தேடிவந்த இன்பத்தை மறுத்தீர்கள். துன்பத்தைப் பெற்றீர்கள்!"

"இளஞ்செடி ஒன்று தண்ணீர் இல்லாமல் வாடியது. அந்தச் செடியினிடம் போய் 'செடியே, செடியே, நான்உனக்குத்தண்ணீர் ஊற்றிப் பிழைக்க வைக்கிறேன். எனக்கு இப்பொழுதே ஏதாவது பலன்தா'என கேட்பதுபோல்என்னிடம் கேட்டீர்களே கதிரவன்"

"அண்ணி, செடிக்கும் பெண்ணுக்கும் வேறுபாடு இல்லையா"

"ஐயோ! கதிரவன்"

"நான் கேட்டதைத் தரமறுத்த போது எனக்கு எப்படி இருந்தது தெரியுமா?"

"ஐயோ! என்னைக் கொல்லாதீர்கள். கொல்லாமல்போங்கள்! போங்கள்!!"

கதிரவன் வெற்றிவீரனைப்போல் வெளியேறிவிட்டான்.

2

அல்லி! அல்லி மலரின் மென்மையையும், குரலிலே குயிலின் இனிமையையும், அழகிலே பெண்மானின் கவர்ச்சியையும் கொண்டவள். கதிரவனின்அண்ணன் சந்திரனின் அன்பு மனைவி.

சந்திரனுக்கும்அல்லிக்கும் மணவினை முடிந்த சிலநாட்களில் மறைந்துவிட்டான் சந்திரன். வானத்துச் சந்திரன்போல் ஒரு நாள்மட்டும் மறைந்துவிடவில்லை. நிரந்தரமாக உலகைவிட்டே மறைந்துவிட்டான்.

இளமை குன்றவில்லை. அழகு குறையவில்லை. இன்பம் அனுபவிக்கும் ஆசை அடங்கவில்லை. வாழவேண்டும் என்ற எண்ணம் அழியவில்லை. எப்படிவாழ்வாள் அல்லி.

'பெண்கள் கெட்டுவிடுவார்கள்' ஆம் இளவயதிலேயே கணவனை இழந்த பெண்கள் கெட்டுவிட ஏதுவிருக்கிறது. அதனால் அல்லி

யும் கேட்டுவிடுவாள் என்றநம்பிய அல்லியின்மாமனும் மாமியும் தங்கள் இரண்டாவது மகன் கதிரவனுக்கு அல்லியை மணம்முடித்து விட விரும்பினர். அப்போழுது தானே அவர்கள் தங்கள் குலப் பெருமையைக் காப்பாற்றிக் கோள்ளமுடியும்.

கதிரவன் முதலில் மறுத்தாலும் பின்பு சம்மதித்தான் திருமணத்திற்கு. காரணம் அல்லியின் மேன்மையான கட்டுக் குலையாத உடல்—குடும்பத்தின் மதிப்பைக் காக்கவேண்டும் என்ற எண்ணம்—வாழ்விழந்த பெண்ணொருத்திக்கு வாழ்வு தருகின்றோம் என்ற உணர்ச்சி.

இரண்டாம் மணம்...நிச்சய தார்த்தமா நடத்தப்போகிறார்கள்? ஒப்புக்காக அல்லியின் பெற்றோரைக் கேட்டனர். அவர்கள் சம்மதம் தந்துவிட்டனர்.

இந்த நிலைமையில் அல்லி தன் கணவனுகப்போகும் கதிரவனின் அன்பையும் தியாகத்தையும் எண்ணிஎண்ணி மகிழ்ந்திருந்தாள்

தன் வாழ்வு வரண்டுவிட்டது என்று எண்ணிக்கோண்டிருக்கும் அல்லியின் வாழ்வில் வரண்டு விட்டால் நான்இருக்கிறேன்வளப் படுத்த என்ற சோல்வதை வேண்டாம் என்பாளா? அதிலும் அவளை மணக்கப்போவது இறந்துவிட்ட கணவனின் தம்பி.

அந்த மகிழ்ச்சியில் அவள் கதிரவனின் முகத்தில்கூடத் தேன்படுவதில்லை. ஒருநாள்...அல்லிவீட்டில் ஏதோ வேலையாய் இருந்தாள் வீட்டில் ஒருவருமேஇல்லை என்று தான் அவள் எண்ணிக்கோண்டிருந்தாள். கதிரவன் அவளைத் தனிமையில் சந்திக்க எண்ணம் கோண்டு அந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக்கோண்டான். மேதுவாக அவளை அணுகினன்.

"அண்ணி"

அவள் திடுக்கிட்டுத்திரும்பினுள்

"என் அண்ணி பயந்துவிட்டீர்களா?"

"இல்லை . நீங்கள் இங்குதான்"

"ஆம் இங்கேதானிருக்கிறேன்"

அவள் நாணத்துடன் தலை குனிந்து ஒதுங்கிநின்றுள்.

"அண்ணி"

"அத்தான்"

"அத்தானு? என்றிலிருந்து இப்படி?"

"ஏன்! நீங்களும்தான் என் அண்ணி அண்ணி என்கிறீர்கள். 'அல்லி'என்றுதான் கூப்பிட்டால் என்ன?"

"அல்லி நான் உன்னிடம் ஒன்று கேட்பேன் தருவாயா?"

"நானே திருமணத்திற்குப்பின் உங்களுக்குத்தானே"

"இன்றுகேட்பதைத்தருவாயா"

"கேளுங்கள்"

"தேன் வேண்டும்"

"தேனா? வீட்டில்இருக்கிறதே. எடுத்துச் சாப்பிடவேண்டியது தானே?"

"அது இல்லை"

"பின் என் கையால் எடுத்துத் தரவேண்டுமோ?"

"இல்லை அல்லி! உன் கனி ...இதழ்களிலிருந்து...ஊறும்... தித்திக்கும்...தேன்"

"கதிரவன்" அலறினாள் அவள்.

"என் அண்ணி தவறு"

"ஆம் மாபெரும் தவறு"

"என் அல்லி...உன்னை மணக்கப்போகிறவன் நான் கேட்பது தவறா? ஆசைப்படுவது தவறா?"

"வீண்ஆசை...விபரீத ஆசை"

"அல்லி...தரமாட்டாயா?"

"மணமாகுமுன் முடியாது"

"உன்முடிவு இதுவானால் என் முடிவு இனி நீ எனக்கு அல்லி யல்ல; அண்ணி!"

அவள் தலைகுனிந்துநின்றாள்... "கதிரவன் இனி நீ எனக்கு அத்தானல்ல, கதிரவன்தான்"

"அல்லி...உன்னை வஞ்சம் தீர்த்துக்கொள்கிறேன். உன்னை என்னசெய்கிறேன் பார். விரைவிலே நான்மணமுடித்து உன்னை எனக்காக ஏங்கச்செய்கிறேன்" அவன் போய்விட்டான்.

3

கதிரவன்போன்றவர்கள் இருக்கவேண்டியதுதான். விதவையை மணந்துகொள்ள முன்வந்த கதிரவன் போற்றப்படவேண்டியவன் தான். என்றாலும் அவன்கேட்ட பரிசுதான் ஆண்குலத்திற்கே அவமானம்.

கதிரவனுக்கும் தாமரைக்கும் முதல் இரவு. கதிரவன் கட்டிலிலே சாய்ந்திருந்தான். தாமரை அவன் காலடியில் அழுதவாறு அமர்ந்திருந்தாள்.

"அத்தான், என்னைஎதற்காகத் தான் திருமணம்செய்துகொண்டீர்கள்"

"தாமரை, உனக்குத் தெரியாது என் அண்ணன்மனைவியைப்பற்றி அவள் பெயர் அல்லி. விதவை என்ற காரணத்தால் நம்திருமணத்தின்போது வெளியேகூட வரவில்லை. அவளை—அல்லிமலரை முகர்ந்தபின்தான் தாமரையை முகரவேண்டும். அல்லியை முகரத் தாமரையின் தயவு வேண்டும். தாமரை இதற்குச் சம்மதித்தால் தான் தாமரையைநான் நுகருவேன் இல்லையென்றால் தாமரை கருகிப் போகவேண்டியதுதான்"

"அத்தான்! அதற்கு அல்லியையே திருமணம்செய்துகொண்டிருக்கலாமே"

"செய்து கொண்டிருப்பேன்... திருமணத்திற்குமுன் அவமதித்து

விட்டாள். அவளை வஞ்சம்தீர்க்க வேண்டும்''

''வஞ்சம்...அதற்குக் கருவியாக என்னைத்தானா உபயோகித்துக் கொள்ளவேண்டும்''

''தாமரை, அல்லியிடம் நான் கேட்டது ஒரேமுத்தம். அவள் மறுத்துவிட்டாள். நீயானால் தருவாயல்லவா?''

''ஓ...நிறையத் தருவேன்''

''தாமரை...நிச்சயமாகவா?''

''நிச்சயமாக இரண்டு கன்னங்களிலும் தருவேன்''

''உம்''

''உங்கள் ஆசை அடங்கும்வரை தருவேன்! என்கை ஓய்ந்து போகும்வரை தருவேன்''

''தாமரை''

''அந்தஇடத்திலேயே எல்லாப் பற்களும் கீழேவிழுந்திருக்கும். சீ! வெறிகொண்ட மிருகம் நீங்கள்''

''தாமரை...'' சினம் பொங்கியது கதிரவனின் முகத்தில்.

''வெட்கமாயில்லை உங்களுக்கு. அண்ணியைத் தாயாக எண்ணுவதைவிட்டு தாரமாக்கிக்கொள்ள—தாரமாகும் முன்னரே இன்பம் அடையஎண்ணியஉம்மை மனிதராக நினைப்பதே தவறு. சீ...சீ''

''ஐயோ அத்தான்'' அலறினாள் தாமரை. ஆம் அவள்பேசியதற்கு அவன்அளித்த பரிசு அவளுடைய இரண்டு கன்னங்களிலும் மாறி மாறி அறைந்துவிட்டான், அவள் கதவைத்திறந்து வெளியேறினாள். அவள் கன்னம் வீங்கியிருந்தது.

''தாமரை'' அழைத்தவள் அல்லி

''அக்கா'' அழுகை பொங்கியது.

''எல்லாம் கேட்டுக்கொண்டு தான் இருந்தேன் சகோதரி—கதிரவன் இவ்வளவு கேவலமானவர் என்பதை நம்பக்கூட முடியவில்லை''

''நம்பத்தான் செய்துவிட்டாரே அக்கா''

இருவரும் அல்லியின் அறையை அடைந்தனர். ''அக்கா''

''தாமரை...என்னால் நீ இன்பம்பெறமுடியாதநிலை இல்லையா''

''நான் அப்படிநினைக்கவில்லை''

''நீ நினைக்காததால்தானே இந்த நிலை. நான் இருக்கும்வரை உன் இன்பவாழ்வு தடைபடும்''

''அப்படியெல்லாம் எண்ணாதீர்கள் அக்கா. வேறுவிதமாக எண்ணிக்கொண்டு ஏதாவது செய்து கொள்ளாதீர்கள்''

''இல்லை சகோதரி...நீ படுத்துக் கொள்'' அல்லி எழுந்து எங்கோ சென்றாள்.

4

''கதிரவன்''

''யார் அல்லியா . என்ன இது புதுமணப்பெண்போல் அலங்கரித்துக்கொண்டு வந்திருக்கிறாய்''

''கதிரவன்... என்னால் என் சகோதரியின்வாழ்வு பாழாவதைப் பார்த்துக்கொண்டிருக்கமுடியாது''

"அதற்காக"

"என்னிடம் நீங்கள் கேட்டதைத்தருவதென்று முடிவுபண்ணி விட்டேன்"

"உம்"

"நான் தற்கொலை செய்துகொள்ள எண்ணினேன். என்னை நீங்கள் அடைய முடியாமல் தாமரையைப் புறக்கணித்துவிடக்கூடாதல்லவா?"

"உம்"

"நான் தயாராக இருக்கிறேன். என்னிடம்உள்ளஎதையும் நீங்கள் எடுத்துக்கொள்ளுங்கள்"

லண்டன்—வாஷிங்டன் மாஸ்கோ

லண்டன்மா நகரம், பரம்பரையாக செழித்து, ஐசுவரியங்களுடன் வாழ்ந்து, நல்ல பண்புடன்இருக்கக்கூடிய ஒருகுடும்பத்தைச் சித்தரித்துக் காண்பிப்பதுபோல்தென்படுகிறது. அமெரிக்கத் தலைநகரம் வாஷிங்டன், புதிதாக பெரும் செல்வத்தை அடைந்தவன் வாழ்க்கையை ஒத்திருக்கிறது. மாஸ்கோவை 'அவர்கள் எல்லாம் பெரும் பணக்காரர்களாகிவிட்டார்கள். நானும் அந்த நிலையை எய்த வேண்டும்' என்ற ஆவேசத்துடன் முன்னேறிக்கொண்டு இருக்கும் ஒருவனுடைய வாழ்க்கைக்கு ஒப்பிடலாம்.

—அமைச்சர் சி. சுப்பிரமணியம்

கதிரவன் அவளையே பார்த்துக்கொண்டு நின்றான். அவன் கண்களிலே வெறி தாண்டவமாடியது. ஆசை நிறைவேரப்போகிறது அல்லவா? அவளை அணுகினான். அப்படியே ஆவலுடன்அவளைவாரினான். வெறியுடன் அவள்அதரங்களைச் சுவைக்க இதழ்களை அருகிலே கொண்டுபோனான்.

அப்பொழுது...அவன் எதிர்பார்த்த செயல் நடக்கவில்லை. அதற்குள் அல்லி அப்படியே துவண்டுவிழுந்தாள்.

"அல்லி..."

அவள் பேசினால்தானே. பேசா நிலையடைந்துவிட்டாள். உடல் அசைவற்றுப்போனது. உள்ளம் உணர்ச்சியற்றுப்போனது. உயிர் பிரிந்துவிட்டது!

கதிரவன்அலறினான். அண்ணி ...அண்ணி..அலறினான்; புலம்பினான். சுவர்களிலே மோதிக்கொண்டான். அவன் உடலெங்கும் குருதி.

அவன் உடலிலே வடியும் உதிரம் அவன்வெறியை—பாவத்தைக் கழுவிவிடுமா?

அல்லி தன்னைப் பலியிட்டுக்கொண்டதுடன் கதிரவனின் வஞ்சம் மேவிய நெஞ்சத்தையும் பலியிட்டுவிட்டாள்.

புறையோடிய புண்

[கார்முகிலன்—கூடலூர்]

"மிஸ்டர்மோகன்! மோகன்!"

"யாரது?"

"நான்தான் கோமளம்!"

கதவு திறந்தது; மோகனின் முகம் தெரிந்தது. கோமளம் வெளியேநிற்பதைக்கண்டவுடன் "அடடே கோமளமா! வா!... என்ன இப்படி இருட்டுவேளையில்? சரி வா மாடிக்குப்போகலாம்" என்று ஆசையினால்வார்த்தைகளை அடுக்கிக்கொண்டே போய் அவள் கையைப்பற்ற முயன்றான்.

"அடச்சீ! நன்றிகெட்ட துரோகி! என் வாழ்க்கையைப் பாழாக்கிய பாதகா! என்னை உன்விளையாட்டுப்பொம்மையாக வைத்திருந்த காலமெல்லாம் போதாது? இன்னுமா அந்த நினைவுநினைக்கிறாய்சண்டாளா?" என்று அலறினாள்.

மோகன் முதலில் சற்றுப் பயந்தான். ஆனால் அவள்பேச்சு மரியாதையற்றுப்போகவே "சரி தான்தெரியும், பெரியபதிவிரதா சிரோன்மணி நீ என்று! அர்த்த ராத்திரி சாமத்தில் தனியாக ஒரு பெண் ஒரு ஆணைத்தேடி வரவேண்டிய அவசியம்என்ன?" என்று ஏளனம் செய்தான்.

"பழிவாங்க..."

"இல்லை பணம் வாங்க...பெரிய கற்புக்கரசி கண்ணகி! பழிக்குப்பழிவாங்க வந்துவிட்டாள்"

"மோகன்...!" தன் இடையிலிருந்த துப்பாக்கியை உருவி அவனைநோக்கி நீட்டினாள்.

"துப்பாக்கி இருந்தால் சுட்டு விடுவாயோ? இதற்கெல்லாம் பயந்தால் நான் இந்த போலீஸ் இன்ஸ்பெக்டர் உத்தியோகத்திற்கேவந்திருக்கவேண்டாமே!"

"படித்த முட்டாளே! குஞ்சைப் பறிகொடுத்த கோழியும் கூடச் சாடிப் பறக்க முயற்சிக்கிறதுபருந்தோடு! அமைதியின் இருப்பிடமான பசுவும் தாவிப் பாய்கிறது பிறர்மேல், தனக்கு ஒரு இன்னல்நேர்ந்தால். அவைகளைப்போல்தான் உன்னால் வஞ்சிக்கப்பட்ட இப்பஞ்சையும் வந்திருக்கிறேன்"

"ஆத்திரத்தில் அறிவிழந்து பேசாதே! அமைதியாய் இரு! என்ன நடந்தது சொல்! ஆவன செய்கிறேன்"

"செய்வதற்கு இனிஎன்னடா இருக்கிறது அயோக்கியனே! உன் கைப்பொம்மையாய்இருந்த கோமளம்---படுக்கையறைப் பதுமையாய் இருந்த பாவை—நீ சொன்னதையெல்லாம் நம்பிய

அபலைப்பெண் மாண்டுவிட்டாள் இன்று வந்திருப்பவள் கோமளமல்ல அவளது உணர்ச்சி உருவம். அவள் கையில் இருப்பது உன்னால் கொடுக்கப்பட்ட பரிசு—ஆம் துரோகம்...வஞ்சகம்... ஏமாற்றம்..."

"கோமளப்! உன்னையே மறந்து உளராதே! பின்னால் நடப்பதையும் எண்ணிப்பார்!"

"மாலையிட்ட மணாளனை மனங்குமுறிமடியச்செய்த முட்டாள்! மானமிழந்தவள் நான் மனங்குமுறி நிற்கின்றேன். மலையே புரண்டாலும் மனம் தளரமாட்டேன். பழிக்குப்பழி எடுக்கத் துணிந்துவிட்டேன்"

"கோமளம்! நீ ஏன் இங்கு வந்தாய்? நடந்ததையும் நடக்க வேண்டியதையும்சொல்! ஆவன செய்கிறேன்"

"நன்றிகெட்டநயவஞ்சகனின் உயிர் குடிக்க வந்திருக்கிறேன். நம்பிய பெண்ணை நட்டாற்றில் விட்ட முட்டாளை இத்துப்பாக்கியால் சுட்டு அவன் ரத்தத்தை அள்ளித் தலையில் தேய்த்துக் கொள்ளவந்திருக்கிறேன். அநீதியை அழிக்க! அக்கிரமத்தை ஒழிக்க! வஞ்சத்துக்கு நஞ்சூட்ட! பழிக்குப்பழிவாங்க!... என் வாழ்க்கையை நீ பாழாக்கினாய்! என் ஆசை நினைவுகளில் நஞ்சைக் கலந்தாய்!. பத்தினியாய் இருந்த என்னைப் பாழாக்கினாய்! என் வாழ்வு சிதைந்ததைப்போல் உன் வாழ்வு சிதைவதைப்பார்! என் உள்ளம் உடைந்ததைப்போல் உன் உள்ளம்உடையுது பார்! பார்! பார்!"

'டுமீல்! டுமீல்!' துப்பாக்கி வெடித்தது. இவ்வளவுநடக்குமென்று எதிர்பாராத மோகன் 'அய்யோ' என்ற அலறலுடன் வீழ்ந்தான்.

"ஒழிந்தான் சண்டாளன்! அழிந்தான் அயோக்கியன்! இவன்போன்ற சதிகாரர்கள், வஞ்சகர்கள் நம்பிக்கை துரோகிகள் இவன் முடிவு கண்டாவது திருந்தட்டுப். அவர்களுக்கு இச்சண்டாளனின் கதை ஓர் அறிவுபயக்கட்டும்" என்று அலறினாள். மோகனின் உடலில் இருந்து வழிந்த ரத்தத்தை அள்ளியபடி பேய் சிரித்தாற்போல் சிரித்தாள். பின் எங்கோ ஓடினாள்.

1

கோமளம் தந்தை இல்லாத பெண். மாவட்ட போலீஸ் அதிகாரி (டி. எஸ். பி) ஆபீசில் டைப்பிஸ்டாக பணிபுரிந்தாள்.

சப்இன்ஸ்பெக்டர் மோகன் மோகங்கொண்டான் கோமளத்தின்மேல். ஏழையாய் இருப்பினும் எழில்நிறை நங்கையவள்.

முயன்றான் மோகன் முல்லையை நுகர. தொடுத்தான்பானம் மாங்கனியைக்கொய்து சுவைக்க. வலைவிரித்தான் பைங்கிளியைப் பிடித்தடைத்து பள்ளியறையை அலங்கரிக்க.

அயர்ச்சியின்றிப் பாடுபட்டான். முயற்சியிலே வெற்றி கண்டான். சோர்வுற்ற நேரத்திலெல்லாம் முல்லையைநுகர்ந்தான் புத்துணர்ச்சியடைந்தான். பசி எடுத்த நேரத்திலெல்லாம் மாங்கனியைப்புசித்தான் மனநிறைவு கொண்டான். கவலைகொள்ளும் நேரத்தில் களிப்படைந்தான் கிளியோடு கொஞ்சி.

மின்னுவதெல்லாம் பொன்னல்ல! வெளுத்ததெல்லாம்பால் அல்ல! இனிப்பதெல்லாம் கருப்பஞ்சாறல்ல! இது ஏனோகோமளத்திற்குத்தெரியாதுபோயிற்று உலக அனுபவமில்லாத பிஞ்சு உள்ளம்கொண்டபஞ்சை அவள்.

“நீங்கள்தான் தஞ்சம்! வஞ்சித்துவிடாதீர்கள்! வாழ்வளியுங்கள்!'' என்றாள்.

“பஞ்சரக் கிளியே கொஞ்சமும் அஞ்சாதே! அத்தான் நானிருக்கிறேன், அகிலமே எதிர்த்தாலும் அன்பிற்கினியாளே! என்னை ஆட்கொண்ட கட்டழகி! இன்ப உலகு காட்டிய இளம்பாவாய்! உன்னைத் தான்மணப்பேன்! உளம்திறந்து நான் உரைக்கின்றேன் நம்பு கண்ணே! நம்பு!'' என்று தன் இடதுகையால் கோமளத்தை தன் மார்போடு அணைத்துக் கொண்டுவலதுகையால் அவள் கூந்தலைத் தடவிக்கொண்டும் கன்னத்தில் கிள்ளிக்கொண்டும் உதட்டில் விரலைப் பதித்துக்கொண்டும் கூறினன்.

உலகையே மறந்தாள் கோமளம். அப்படியே அவனை இறுகத் தழுவிக்கொண்டாள். இன்பம்! இன்பம்!! மாபெரும் இன்பம்!!!

துன்பம்! துன்பம்! தூரத்திற்றுஇன்பத்தை! அவமானம்! அவமானம்! அடுத்துத்தொடர்ந்தது! ஆம், கழுத்திலே தாலியின்றி வயிற்றிலேவளர்த்துவிட்டாள் ‘கரு’வை. இரண்டுமாதத்திற்குப்பின்தான் இச்செய்தி தெரிந்தது.

ஓடினாள் இன்ஸ்பெக்டரிடம். வேண்டினாள் தன்னை சடுதியிலே மனைவியாக்கிக்கொள்ளுமாறு.

அவள் கருவைக் கலைக்க வழி சொன்னானேதவிர அவள்கழுத்திலே மாலைபோட வழிசொல்லவில்லை. கண்ணீர்பெருக்கி, கை கூப்பி, காலைப்பிடித்து, கதறி அழுது கெஞ்சினாள் கோமளம். கொஞ்சமும் அவன்மனம்இரங்கவில்லை. கடித்தான்; உள்ளொன்றும் புறமொன்றும் பேசினான்.

கருங்கல்லைத் தண்ணீரில் போட்டு அது கரையும் என்று காத்திருந்தவன் கதைபோல் ஆயிற்று கோமளத்தின் கதை.

ராஜா பார்லி
பிஸ்கட்ஸ்.
குழந்தைகளுக்கு சிறந்த ஆகாரம்.
PROP. சங்கு பிள்ளை 15, திண்டுக்கல் ரோடு, மதுரை

2

ஈராண்டுகள்பிறந்து இறந்தும் விட்டன. கோமளம் புதிதாக தான் வந்த ஊரின் போலீஸ் ஸ்டேசனில் டைரக்டராயிருந்த 'சாந்தப்பன்' கோமளத்தின் கழுத்தில் மஞ்சள்கயிறொன்றை அணிவித்து அவள்கழுத்தையும் வாழ்வையும்அலங்கரித்துமனைவி யாக்கிக்கொண்டான்.

'நடந்தவை நடந்தவைகளாக இருக்கட்டும். இனி நடப்பவை நல்லவைகளாக இருக்கட்டும்' என்ற அறிஞனின் அறிவுரையை மனதிற்கொண்டு நடந்ததை மறந்து இல்லற வாழ்க்கையில் ஈடுபட்டாள் கோமளம்.

இருந்தாலும் ஒருசில நேரங்களில் தனிமையாக இருக்கும் போது இன்ஸ்பெக்டர் மோகன் தனக்குச் செய்த துரோகத்தையும், தான் சாந்தப்பனை ஏமாற்றி திருமணம் செய்துகொண்ட துரோகத்தையும் எண்ணுவாள். அவள் இதயம் ஆராத்துயரடையும். அழுவாள், துடிப்பாள், தலையில் அடிப்பாள்.

சாந்தப்பன் முயற்சியால் முன்பு இழந்த டைப்பிஸ்ட் வேலையை மீண்டும் பெற்றாள். வாழ்க்கை எப்படியோ நடந்து கொண்டிருந்தது.

இந்நாளில்தான் இன்ஸ்பெக்டர் மோகன் வேலை மாற்றலாகி அதேஊருக்கு வந்துசேர்ந்தான். கோமளம் அங்கே வேலைசெய்வதைக் கண்டதும் முதலில் அதிர்ச்சியுற்றான். பின் எப்படியோ துணிந்துவிட்டான்.

மோகனைக்கண்ட கோமளம் புலியைக்கண்ட மான் போல, பருந்தைக்கண்ட கோழிக்குஞ்சு போல மிரண்டாள். வேலையை விட்டுவிடலாமா என எண்ணினாள். 'நம்கணவனுக்கு நம்மேல் சந்தேகம் ஏற்பட்டுவிட்டால்!' என எண்ணினாள். அஞ்சினாள். பல்லைக் கடித்துக்கொண்டு எப்படியோ இருந்துவிட்டாள்.

ஒருநாள் மாலை கோமளம் கடைத்தெருவுக்கு வந்துவிட்டு வீட்டிற்குப் போவதற்காக பஸ்ஸிற்குக் காத்துநின்றாள். எதிர்பாராதவிதமாக இன்ஸ்பெக்டர் மோகன் அங்கே சைக்கிளில் வந்தான்.

"கோமளம்! என்னை மன்னித்துவிடு!" என்று அருகில்சென்று கூறினான்.

"தெருவில் என்னோடு பேசாதீர்கள். தயவுசெய்து இனியாவது என்னை வாழவிடுங்கள்" அவள் கண்களிலே கண்ணீர் வழிந்தது. துடைத்துக்கொண்டாள். மோகனும் போய்விட்டான்.

இதை சற்றுதூரத்தில்நின்று பார்த்துக்கொண்டிருந்த கான்ஸ்டேபில் சுந்தரம்—கணவனின் நண்பன்—கோமளத்திடம்வந்து "என்ன கோமளம்? ஏன் அழுகிறாய்?" என்றான்.

"என் சொந்த விஷயத்தில் தலையிடாதீர்கள்" என்று கூறி விட்டாள்.

"சொந்த விஷயம்! சாந்தப்பனுக்குத் தெரியாமல்..." என்று மனதிற்குள் சொல்லிக்கொண்டே சென்றுவிட்டான் சுந்தரம்.

'புறங்கூறி பொய்த்துயிர் வாழ்தலின் சாதல் அறங்கூறும் ஆக்கம் தரும்' என்ற வள்ளுவனின் வேதவாக்கு கான்ஸ்டேபில் சுந்தரத்திற்கு ஏனோ தெரியாது போயிற்று. தான் கண்டதை அப்படியே சாந்தப்பனிடம்கூறி விட்டான். செய்திகேட்டசாந்தப்பன் சீறினான்; சினந்தான்; வெகுண்டெழுந்தான். ரத்தம் கொதிப்பேறியது; கண்கள் சிவந்தன; வேகமாகநடந்தான்.

"கோமளம்! கோமளம்!" என்று கூப்பிட்டுக்கொண்டே வீட்டிற்குள் நுழைந்தான்.

"என்ன அத்தான்?" என்று கேட்டுக்கொண்டே ஓடிவந்தாள் கோமளம். சாந்தப்பன் இருந்த ஆவேசநிலையைக்கண்டுபயந்தாள்

"நேற்று பஸ் ஸ்டாப்பில் என்ன நடந்தது?"

"இன்ஸ்பெக்டர் மோகன் என்னிடம்வந்து 'என்ன கோமளம் சௌக்கியமா?' என்றார்"

"இதை ஏன் என்னிடம் நீ நேற்றே சொல்லவில்லை. புதிதாகவந்த அவர்வந்து அவ்வளவு சரசமாக உன்னிடம் நலம்விசாரிக்கக் காரணம் என்ன?"

"எனக்கு ஒன்றும்தெரியாது. அவராகத்தான் என்னிடம்வந்து பேசினார். இதை உங்களிடம் சொல்லாதது என்குற்றம்தான்"

"சரி இரு! இதோ வருகிறேன்" என்று ஆராயாது ஆவேசமிகுந்தனாய் வெளியே ஓடினான்.

கோமளம் பயந்தாள்; நடுங்கினாள்; அவள் கழுத்து குறுகியது; தொண்டை இறுகியது; நா வறண்டது; கண்கள் இருளடர்ந்தன. உடலெல்லாம் வியர்த்துக்கொட்டியது. அப்படியே மயங்கி 'தொப்'பென்று கீழே விழுந்துவிட்டாள்.

அய்யோ பாவம்! கோமளத்தின் உள்ளம் எரிமலையோடு போட்டியிட்டது. அப்பாவையின் நெஞ்சம் அலைகடலையும் வென்றது. 'குற்றம் புரிந்தவன் வாழ்க்கையில் நிம்மதியேது' என்ற

எதிர்க்கட்சி!

எதிர்க்கட்சிஎன்றால் ஆளும் கட்சியைக் கண்ணை மூடிக் கொண்டு காலைவாரிவிடுவதல்ல அதன் ஆட்சியில் குற்றங்குறை காணும்போது அதை எடுத்துச் சொல்லுவதுதான் எதிர்க்கட்சிக்குள்ள பொறுப்பு ஆளும்கட்சி செய்கிற நன்மைகளையும் சீர்குலைத்து, மக்களை நிர்க்கதியில் நிற்கவைப்பதென்பது நல்ல எதிர்க் கட்சிக்குத் திட்டமாக இருக்கமுடியாது.

—கவிஞர் கண்ணதாசன்

நீதிவாக்கியம் அங்கே உண்மையாயிற்று.

இன்ஸ்பெக்டர் மோகன் வீட்டில் தனிமையிலே சாந்தப்பன் மோகனைச் சந்தித்தான். தன் மனைவியிடம் காரணம் இல்லாது பேசியதுபற்றிக்கேட்டான். சரியான பதில் தரவில்லை மோகன். பேச்சு வலுத்தது. மட்டுமரியாதை இல்லாமல் எல்லைமீறியது

"படித்த முட்டாளே! அடுத்தவன்மனைவியிடம் பேசுவதற்கு உனக்கு என்னடா அவ்வளவு தைரியம்" என்றான் சாந்தப்பன்

"மானங்கெட்டவனே! கோமளத்திற்கு நீ நேற்று வந்தவன். நான்தானடா ஆதியோடந்தமாக அவளுக்குக் கணவன்"

"ஆ! என்ன...?"

"ஆம்! இதை உன்மனைவியிடமே சென்று கேட்டுப்பார்..."

அதற்குமேல் அங்கு சாந்தப்பன் நிற்கவில்லை. தலைகுனிந்தான். தன்னையே மறந்தான். நடைப்பிணமானான்.

'யாகாவா ராயினும் நாகாக்க' என்ற பொய்யில் புலவனின் பொருளுரையைக் கற்றும் அறிவில்லாத முட்டாள் சிந்திக்கத் தவறிவிட்டான். உதவி செய்யாதுபோயினும்உபத்திரமாவது செய்யாதிருப்போம்என்றஉயர்ந்த மனப்பான்மை அந்தமோகன் என்ற அயோக்கியனுக்கு ஏனோ இல்லாதுபோயிற்று. விளையாட்டிற்குவைக்கிற நெருப்புப்பொறியேயாகினும் அதனால் வீடுபற்றி எரிந்துபோகும் என்ற உண்மை ஏனோ அந்த உன்மத்தனுக்குத் தெரியாதுபோயிற்று.

கோமளமும் தானும் கொண்டிருந்த கள்ள நட்பை எடுத்தியம்பி நல்லமுறையில் சென்றுகொண்டிருந்த கோமளத்தின் வாழ்க்கையாற்றில் நஞ்சைக் கலந்துவிட்டான். அதன்பலன்?

3

இரவு எட்டு மணி இருக்கும். பொலிவிழந்த முகத்தோடு தட்டுத்தடுமாறி வீட்டினுள் நுழைந்தான் சாந்தப்பன். "அத்தான்" என்றழைத்தவாறு ஓடிவந்தாள் கோமளம்.

"கோமளம்! என்மனநிலை சரியில்லை. எனக்கு சாப்பாடுவேண்டாம். நான் நல்லஓய்வு எடுக்க வேண்டும். அமைதி தேவை. தயவுசெய்து என்னை எதுவும் கேட்காதே! தொந்தரவுபடுத்தாதே!" என்று சொல்லிவிட்டு தன் அறைக்குள் சென்று உள் தாழ் போட்டுக்கொண்டான். கோமளம் செய்வதறியாது கண்ணீர்வடித்து நின்றாள்.

சுவர்க் கடியாரம் மணி பத்து என்றுஎடுத்தியம்பிற்று. கோமளத்தின் மனம் அமைதி பெறவில்லை. கணவனின் செய்கையில் சந்தேகம் ஏற்பட்டது. கதவைத் தட்டினாள், பதில்இல்லை. சந்தேகம் வலுத்தது. தட்டி

21846

ளுள்! தட்டினுள்! தாழ் தாழை கவே கழன்று கதவுதிறக்கும் அளவிற்குத் தட்டினுள்! ஓங் கிக் காலால் மிதித்தாள்.

'படார்' என்ற சத்தத்தோடு கதவு திறந்தது. விளக்கை ஏற் றினுள். அவ்விளக்கொளியில் தென்பட்ட காட்சியைக் கண்டு பேயறைந்தாற்போல் சிலையென நின்றுவிட்டாள். ஆம் சாந்தப் பன் குற்றுயிராய்த் தரையிலே கிடந்தான். 'அய்யோ! அத் தான்' என அலறித்துடித்து சாந் தப்பனைத்தூக்கித் தன்மடியிலே வைத்துக்கொண்டு 'அத்தான்! அத்தான்!' என அறைினுள்.

"என்னைத் தனியாக விட்டு விட்டுத் தற்கொலையா பண்ணிக் கொண்டீர்கள். நான் என்னத் தான் தவறுசெய்தேன்? யாரும் ஏதேனும் சொன்னார்களா?... தந்தைதாய் இழந்து உங்களையே தஞ்சமெனநம்பி இருந்தேனே! நட்டாற்றில் விட்டுவிடவா முடிவுபண்ணினீர்கள்! என்னை அனுதையாக்கிவிடாதீர்கள் அத் தான்!" என்று அலறினுள்.

"நான் உன் அத்தானல்ல!... மோகன்!...அவனை நீ மணந்து கொள்! மானம்போனபின் வாழ விரும்பவில்லை. 'புறையோடிய புண்'ணை வைத்துத் திரைபோட் டு நீண்டநாளுக்கு மறைக்கமுடி யாது......"

அதற்குமேல் சாந்தப்பனுல் பேச முடியவில்லை. கடைசி வார்த்தை பேசும்போதே நாக்கு குளறியது. பின் அந்தக்குளற லும் நின்றது; மூச்சும் நின்றது.

"அய்யோ! அத்தான்! அத் தான்!" எனக் கத்தினுள் கற்பை யும், கணவனையும் இழந்த அக் கடையகத்தாள்.

தன் வாழ்வு வேரில்லாத மர மாக, நீரில்லாத மீனுக, நிலவில் லாத வானமாகப் போவதற்குக் காரணமாய்இருந்த சண்டாளன் சப்இன்ஸ்பெக்டர் மோகனைக் கொன்று பழிக்குப்பழி எடுக்க வேண்டும் எனத் துணிந்தாள். பெட்டியைத் திறந்து எதையோ எடுத்து இடையில் செருகிக் கொண்டு அந்த இருட்டு வேளை யில், ஊரடங்கிய நேரத்தில் எங்கோ ஓடினுள் கோமளம்.

* * * *

ஓடிய கோமளம் எங்கே ஓடி னுள், என்ன செய்தாள் என் பதை முதலிலேயேபடித்தீர்கள் அதன்பின்......!

அடுத்தநாள் காலையிலே ஆங் கோர் மரக்கிளையில் கோமளம் பிணமாகத்தொங்குகிறுள் என்ற செய்தி காற்றினும் கடுகி ஊருக் குள் பரவியது. புறையோடிய புண்ணுக்கு மரணம்தான் மருந் தாக இருந்தது.

தோல்வியிலும் வெற்றிகண்ட அஞ்சல்முறை

[லின்பூல்]

கதை நடந்து நூறு ஆண்டுகள் ஆகிவிட்டன. இப்பொழுது நினைத்தாலும் மயிர்க்கூச்செறியும். புதிதாக என்னவோ புரட்சிமுறை ஒன்றைப்புகுத்தப்போகிறார்களாம் கடிதம் எழுதி, தபால் பெட்டியில் வழக்கம்போல் போடவேண்டியதாம்; கடிதத்தை இயந்திரம் ஒன்றுபிரித்துப்படிக்குமாம்; படித்து அதேதகையெழுத்து வடிவத்தில் வானொலிஅலைகள்மூலம் அனுப்புமாம்; சேருமிடத்தில் அது அப்படியே இன்னொருஇயந்திரத்தின் மூலம் எழுதப்பட்டு, மடித்து முத்திரைகுத்தப்பட்டு, விலாசதாரிடம் போய்ச்சேருமாம். என்ன இருந்தாலும் அன்றைய 'குதிரை அஞ்சலுக்கு' ஈடுவருமா? அதைப்பற்றிய நாடோடிக்கதைகள்தாம்எத்தனை! அதற்குரிய வரலாற்றுச் சிறப்புத்தான் எவ்வளவு! 1860ம் ஆண்டு எப்ரல் மாதம் 3ம் தேதி தொடங்கி 1861 அக்டோபர் மாதம் 26ம் தேதிவரை அமெரிக்காவில் மேற்குப் பகுதியில் பனியும் வெயிலும் காடும் மலையும் சிவப்பு இந்தியர் பகைமையும் குதிரைக் கள்ளர் சூழ்ச்சியும்எனப் பலவகைஇடையூறுகளையும் பொருட்படுத்தாமல் 79வாரம் குதிரைகள்மூலம் நடைபெற்ற தபால்போக்குவரத்துமுறை 'தோழில்'என்றவகையில் நொடித்தது என்னவோ உண்மைதான். ஆனால் அது வரலாற்றிலே அழியாத இடம்பெற்றுவிட்டது.

மிஸ்ஸூரிமாநிலத்தில்சேயின்ட் ஜோசப் என்ற இடத்துக்கும் கலிபோர்னியா மாநிலத்தில் சாக்ரமென்டோ ஊருக்கும் இடையே குதிரை அஞ்சல் நடைபெற்றது. போய்வரஏறக்குறைய2000மைல். சேயின்ட் ஜோசப் ஊரில்போட்ட கடிதம் எட்டேநாளில் சாக்ரமென்டோ போய்விடும். அவ்வழியில் தபால் கொண்டுசென்ற குதிரை வீரர்கள் எல்லாருமாகச் சேர்ந்து மொத்தம் ஏறத்தாழ 6,16,000 மைல் குதிரைமீது பாய்ந்திருக்கின்றனர்; உலகத்தை 24 தடவை சுற்றியதற்கு அது இணையாகும்.

அஞ்சல் எடுத்துக்கொண்டு குதிரைமீதமர்ந்தவன் இடையில் எங்கும் இளைப்பாறுமல் 75 அல்லது 100மைல் செல்வான். ஏறக்குறைய ஏழு குதிரைகள் மாற்றியிருப்பான். பத்துமுதல் இருபது மைலுக்கு ஒருமுறை குதிரை மாறும். ஏறக்குறைய 100 கடிதங்களை இவன் கொண்டுசெல்வான். கொண்டுசென்ற தபால் பையை அடுத்த குதிரைவீரனிடம் ஒப்படைத்துவிட்டுத்தான் சற்று இளைப்பாறுவான். பின்னர் மறு

தபால் எடுத்துக்கொண்டு வந்த வழியே மீண்டும் குதிரைஏறிப் பாய்ந்து வந்து சேர்வான்.

இவ்வாறு 80 குதிரை வீரர்கள் இவ்வேலைக்கு அமர்த்தப்பட்டிருந்தனர். குதிரை அஞ்சல் நடந்த 19மாதங்கள்வரைக்கும்அவ்வேலையில் நிலைத்தவர்கள் சிலரே. பலர் சிலவாரங்களில் நின்றுகொண்டனர். குதிரைப் பாய்ச்சல் ஒத்துக்கொள்ளாமல் உடல் நலிவுற்றோர் சிலர். தபால் பையுடன் கீழ் இறங்கும்போது வாயிலும் மூக்கிலும் குருதிவரக் கண்டவர் பலர்.

'குதிரை அஞ்சல்' தனிப்பட்டவர் நடத்திய தொழில். ஆனால் அதில்ஏற்பட்டதோ பெருநஷ்டம். என்றாலும் ஒருவர் நொடித்துப் போனதும், இன்னொருவர் முன் வந்து பணம் போடுவார். அப் புதுமைத் தொழிலில் அவ்வளவு கவர்ச்சி! முதலில் ஒரு கடிதம் அனுப்ப 5 டாலர் செலவாயிற்று; பின்னர் கடிதத்துக்கு ஒரு டாலர் வீதம் ஆயிற்று. சராசரியாகப் பார்த்தால் கடிதம் ஒன்றுக்கு 3 டாலர்வீதம்வசூலாகியது. ஆனால் குதிரை அஞ்சல் நடத்தியவர்கள் குதிரைகளுக்கும், குதிரை வீரர்களுக்கும், வழிநிலையங்களுக்கும், தீனிக்கும், குதிரைகளைக்கவனிப்பவர்களுக்குமாகக் கடிதம் ஒன்றிற்கு 16 டாலர் வீதம் செலவு செய்தனர். எனவே கடிதம்ஒன்றிற்கு 13 டாலர் நஷ்டம். ஆக, குதிரை அஞ்சலில் பணம் போட்டவர்களுக்கு 3,90,000 டாலர் நஷ்டம். 19 மாதங்களில் கம்பெனி மூடப்பட்டது.

இருந்தாலும்; தபால் ஏற்றிக்கொண்டு ஓடிய இந்த மட்டக்குதிரைகள் அமெரிக்கர் மேற்குப்பகுதியில் பரவி நிலைபெறுவதற்குப் பேருதவியாயின. ராக்கி மலைகளைக் குளிர்காலத்தில் கடக்க முடியாது என்ற கதையை இக் குதிரைகள் பொய்யாக்கின. மாபெரும் அமெரிக்கப் பாலைநிலத்தின் வெம்மையும் கொடுமையும் சிம்மசொப்பனமாக இருந்தகாலம் மலையேறியது. செய்தித்தாள்களும் மேற்குப் பகுதிகளுக்கு விரைவாகக் கிடைத்தன. ஆபிரகாம் லிங்கன் தேர்தலில் வென்ற செய்தி 1860 நவம்பர் 7ம் தேதி குதிரை அஞ்சல்மூலம் பறந்து, சான்பிரான்சிஸ்கோ நகரை நவம்பர் 14ம் தேதி எட்டிவிட்டது. அடுத்த மார்ச்மாதம் லிங்கன்நிகழ்த்திய பதவி ஏற்பு உரை நெப்ராஸ்கா மாநிலத்திலுள்ள போர்ட்கீர்னியிலிருந்து புறப்பட்டு நெவேடா மாநிலத்திலுள்ள போர்ட் சர்ச்சிலுக்கு ஏழு நாளில் சென்று சேர்ந்தது; இடைப்பட்ட 1600மைல் ஓட்டத்தில் சிறந்த குதிரைகள் பல கடுங்குளிராலும் பனியாலும் இறந்தன.

அஞ்சல் முறையில் புதிது புதிதாகப் பல புரட்சிகளை ஏற்படுத்தலாம்; ஆனால் குதிரை அஞ்சல் முறை அடைந்த வரலாற்றுப் புகழைமட்டும் அடைய முடியாது.

★

✸ திரைப்படத் திறனாய்வு ✸

நல்லவன் வாழ்வான்

முட்டாள்களைத் திருத்தமுயன்ற முகமதுநபியைக் கல்லால் அடித்து விரட்டிக்கொன்றார்கள்!

மாக்களின் கூட்டம்போன்று வாழ்ந்த அநாகரிக காட்டுமிராண்டிகளை மக்களாக்க முயன்ற இயேசுவைச் சிலுவையில் அறைந்து கொன்றார்கள்!

மத வெறியும், சாதி வெறியும் கொண்டு அன்னியரின்மோகத்தில் அடிமைப்பட்டுக்கிடந்த மக்களைத் தட்டிஎழுப்பி அகிம்சைமூலம்சுதந்திரம்பெற்றுத்தந்த காந்தியடிகளைச் சுட்டுக் கொன்றார்கள்!

அமெரிக்காவில் நீக்ரோக்களின் அடிமை விலங்ககற்றிய ஆப்ரகாம் லிங்கனை விட்டா வைத்தார்கள்; சுட்டுக்கொன்றார்களே!

வங்காளத்திலே சுதந்திரக் கிளர்ச்சிசெய்த பகவத்சிங் தூக்கிலே தொங்கவிடப்பட்டான்!

தாய்நாட்டு விடுதலைப் போராட்டத்திலே குருதி கொட்டக்கொட்டக் குண்டாந் தடியால் அடிக்கப்பட்டும், கொடியைவிடாத திருப்பூர் குமரன் அடித்தே கொல்லப்பட்டான்!

அண்மையில்கூட அகில உலக நாடுகளின் கவனத்திற்குள்ளாகி அருந்தொண்டாற்றிவந்த ஐக்கிய நாடு சபையின் காரியதரிசி ஆமர் சீல்டு ஆப்ரிக்காவிலேவிமானவிபத்துக்குள்ளாக்கப்பட்டுக் கொல்லப்பட்டார் என்றே கூறப்படுகிறது.

இந்தவிதமாக நாட்டுக்கும் மக்களுக்கும் நல்லதுசெய்ய நினைத்த—நினைக்கும் நல்லவர்கள் ஒவ்வொருவரும் இயற்கையான இறப்பிற்குமுன் கொல்லப்பட்டுள்ளனர்

ஆனால் இந்தப் படத்தில்வரும் நல்லவன் முத்து வாழ்கிறான் இறுதியில். படத்தின் பெயர் நல்லவனுக்குக் காலமில்லை என்றிருந்தால் இக்காலத்திற்கு ஏற்றபடி மிகவும் பொருத்தமாக இருந்திருக்கும்:

மூலக் கதை: நா. பாண்டுரங்கன் எம். ஏ. வசனம்: சி. என். அண்ணாதுரை எம்.ஏ., எம்.எல்.ஏ.

கதைப்போக்கில்தர்க்கத்திற்கும் சர்ச்சைக்கும் உரிய கட்டங்கள் பல உண்டு. பூர்ணமாக திரு. அண்ணாதுரைஅவர்களால் எழுதப்பட்ட வசனம் என்று எந்த ஒரு பகுதியையும் குறிப்பிட்டுக் கூற முடியவில்லை. 'வேலைக்காரி'யின் ஆர்ப்பாட்டம் எள்ளத்தனையும் இல்லை. சாதாரண முறையிலேயே அமைந்துள்ளது.

மக்கள் திலகம் எம். ஜி. ஆர். நல்லவன் முத்துவாக நல்லமுறையில் நடித்துள்ளார். சாமியார் வேடத்தில் தன் தாயைக் காணும் கட்டத்தில் உருக்கமாக நடித்துள்ளார். அவரது 'சுமைதாங்கி' நாடகத்தின் பாகமே இது. இவருக்கு இணைகொடுத்து நடிக்கிறார் ராஜசுலோசனா. ஆணுடையில் மிகவும் அட்டகாசமாக ரசிக்கும்படி

நடித்துள்ளார். எதிரி வேடத்தில் வருபவர் எம். ஆர். ராதா. வழக்கம்போல் அவரது பலரகக் குரல் ஆர்ப்பாட்டங்கள் உண்டு. நம்பியாரும், ஈ.வி. சரோஜாவும் அடக்கமாக, ஏற்றபாகத்தைக் கடமையுடன் நிறைவேற்றியுள்ளார்கள்.

முத்து, தான் நிரபராதி என்று நிரூபிக்க உள்ளதாகக் கூறப்படும் ஒரே சாட்சியான கிழவியை அடைக்கப்பட்ட பீப்பாவை தண்ணீருக்குள்தள்ளிவிடும் கட்டமும் அதனால் ஏற்படும் சண்டைக்காட்சிகளும் மிகைப்பட உள்ளது. 'குத்தாலத்து அருவியிலே' என்ற பாடல் கேட்க இனிமையாக அமைந்துள்ளது.

பாலும் பழமும்

பல திருப்பங்களைக் கொண்ட கருத்து நிறைந்த கதை, சத்தான வசனநடை கொண்டது 'பாலும் பழமும்' இருந்தாலும் தன்மீது உயிரையே வைத்திருக்கும் கணவனை—கண்ணியமாக டாக்டர் தொழில் புரிந்துகொண்டு இருப்பவனை—ஒரு மனைவி தனியேவிட்டுப்பிரிந்துசெல்வதென்பதும், தான் நர்சாக இருந்தால் நோயாளியாயிருந்த ஒருவன் தன்வந்தின்பின்னே வெளிநாடுசென்றுதிரும்புவதென்பதும் கற்பனைக்கும்எட்டாதகற்பனை

நடிகர்திலகம் சிவாஜிகணேசன் டாக்டராக வந்து தனது நடிப்பின் தரத்தை மேலும் ஒருபடி உயர்த்திக்கொண்டுள்ளார். தன்மனைவி நலமில்லாமல் இருக்கும் நிலையில் ஆஸ்பத்திரியின் அழைப்பை அறிவிக்க அலறும் போன் மணியின் ஓசையைக் கேட்டு வெறுப்பும் வேதனையும்கொள்ளும் சமயமும், இரண்டாவது மனைவி (சௌகார் ஜானகி)யிடம் தர்க்கிக்குமிடத்திலும் மிகச்சிறப்பாக, இயல்புடன் நடித்துள்ளார்.

நர்ஸ் வேடம் தனக்கே உரியது என்ற முறையில் பிரமாதமாக நடித்துள்ளார் சரோஜாதேவி. நிகரற்ற நடிப்பு. அவர் சிரிக்கும் போது நாமும் சிரிக்கிறோம்; பதறும்போது நாமும் பதறுகிறோம். அழும்போது நம்மையும் கலங்க வைக்கிறார்.

சௌகார் ஜானகியும் பொருத்தமாக நடித்துள்ளார். இவரது பாத்திரத்திலிருந்து பெண்களுக்குக் கொடுக்கும் கருத்து, விரும்பாத கணவனிடம் வாழ்க்கை நடத்துவதை விடுத்து, சட்டபூர்வமான மணவிலக்குப்பெற்று, சுதந்திரமாக மக்கள் பணியில் (ரெட் கிராஸ்)ஈடுபடலாம் என்பதுதான்.

கண்ணதாசனின் பாடல்களில் கருத்தாழமும், உயர்ந்த தத்துவ விளக்கமும் பொங்கி வழிகிறது. "போனால் போகட்டும் போடா" "நான் பேச நினைப்பதெல்லாம்"

என்ற பாடல்கள் குறிப்பிடத்தக்க வையாகும்.

இப்படத்தின் பெரும் குறை எம்.ஆர். ராதா, சாயிராம், கருணாநிதி குழுவினரின் லேகிய காமிக். கதைக்கும் இதற்கும் எவ்வித சம்பந்தமும் கிடையாது. உயர்ந்த கருத்துடன் ஆவலைத்தூண்டியபடி செல்லும் கதையோட்டத்தைப் பெரிதும் சோதிக்கிறது. தயவு தாட்சண்யமில்லாமல்வெட்டிவிட்டால் படத்தின்தரம் இன்னும் பலமடங்கு உயர்வாக இருக்கும்; படத்தின் நீளமும் குறையும்; பார்ப்பவர்களின் நேரமும் மிச்சமாகும்.

இதேபோல் கதையின் கடைசிக் கட்டத்தில் வீட்டைவிட்டு வெளியேறி ஓடும் சரோஜாதேவி நீண்டதோர் பாட்டுப் பாடியபடி, ஒரு கோவிலை அடைகிறார். இந்தக்கட்டத்தில் பாடல் தேவையே இல்லை.

சுப்பையாவும், பாலையாவும் கூட இப்படத்தில் நடிக்கத்தான் செய்கிறார்கள்.

இப்படத்தில் ஓர் புதுமை... நடனமே கிடையாது. அசட்டு நகைச்சுவைக்காட்சிகளையும், மற்றும் வேகத்தைத் தடைசெய்யும் வேண்டாதபகுதிகளையும்குறைத்து 13 அல்லது 14 ஆயிரம் அடிக்குள் கச்சிதமாக முடித்திருந்தால் நல்ல சிறப்புடையதாக்கி இருக்கலாம். டைரக்டர் பீம்சிங்கின் முத்திரை பல இடங்களில் பளிச்சிடுகிறது.

[illegible] பெயர்ப் போட்டி
சரியான விடை

1 [illegible]
2 ப.சமல[illegible]
3 அன்பு எங்கே
4 தெய்வப் பிறவி
5 மருதநாட்டுவீரன்
6 எல்லாம் இன்பமயம்

எல்லாம் சரியாக எழுதிய கீழ்க்கண்ட 15 நபர்களுக்கு பரிசுத் தோகை பகிர்ந்தளிக்கப்பட்டது.

1 டி. பூசாரி, கலைமகள் உயர் ஆதாரப்பாடசாலை, இராமச்சந்திரபுரம், சுந்தரபாண்டியம் போஸ்ட், ஸ்ரீவில்லிபுத்தூர் தாலூகா.

2 மே.அ. இராமமூர்த்தி, உஞ்சனை மேட்டுப்பாளையம், குமாரமங்கலம் அஞ்சல். (சேலம்)

3 ஏ. பிரபாகரன், 6-26-15 பே. பழனிச்சாமி தெரு, அருப்புக்கோட்டை.

4 மு. மே[illegible]தின், சென் ஜோசப் கா[illegible]ஜ, [illegible]ன்னூர் ஆர். எஸ். (நீலகிரி)

5 எம். எஸ். ரேகுபதி, பதி விலாஸ், திருச்சிரோடு, கீழப்பழுவூர் போஸ்ட். (அரியலூர்)

6 ஜி. துரைராஜு, S/o ஏ. ஆர். கோவிந்தசாமி, கீழப்பழுவூர் போஸ்ட். (திருச்சி)

7 பி. புகழேந்தி C/o ந. தனபாலன், (எஸ்.வி.) தலைமை அஞ்சலகம், கும்பகோணம்.

8 நா. வே. கிருஷ்ணமூர்த்தி, 13, குச்சி கட்டித் தெரு, கும்பகோணம்.

திரைப்படப் பெயர் நினைவுப் போட்டி 13

பரிசு ரூ. 5

கட்டணம் கிடையாது

முடிவு தேதி: **20—10—61**

1	சி — கா —
2	— ர — த —
3	— — பி — — தி
4	— — ம்ப — — —
5	கு — — — வி — — —
6	ம — — — — — — — — ம்

இந்த அச்சுக் கூப்பனை அவசியம் வெட்டி அனுப்பவேண்டும்

தமிழில் பெயர், விலாசம்:

....

....

....

....

(போட்டிநிபந்தனைகள்பின்பக்கம்)

போட்டி நிபந்தனைகள்

1 கட்டத்திலுள்ள கோடிட்ட இடங்களை ஒவ்வொரு எழுத்தால் பூர்த்தி செய்தால் 1931 முதல் இன்றுவரை வெளிவந்த தமிழ்ப் படங்களின் பெயர்கள் வரும்.

2 முதல்கூப்பன் அச்சுக்கூப்பனிலும் அதன்பின் 9 கூப்பன்கள் தனித்தாளிலுமாக 10 கூப்பன்கள் (வெவ்வேறுவிதமாக) வீதம் ஒருவர் எவ்வளவு கூப்பன்கள்வேண்டுமானாலும் எழுதி அனுப்பலாம். அடித்தல், திருத்தல் இல்லாது தெளிவாக இருக்கவேண்டும்.

3 ஒன்றுக்கு மேற்பட்டோர் சரியான விடை அனுப்பினால் பரிசுத் தொகை பகிர்ந்து கொடுக்கப்படும்.

4 விடை, போட்டி ஆசிரியரின் விடைக்குச் சரியாக இருக்கவேண்டும். போட்டி ஆசிரியர் தீர்ப்பே முடிவானது.

5 20-10-61க்குப்பின் வரும் கூப்பன்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

6 வெற்றி பெற்றவர்கள் பெயரும் சரியான விடையும் அடுத்த இதழில் வெளிவரும்.

அனுப்பவேண்டிய விலாசம்:

ஆசிரியர், திரைப்படப் பெயர் நினைவுப் போட்டி,

மகிழ்ச்சி இல்லம், விருதுநகர்

9 க. குஞ்சப்பன் (... கன்), வக்கம்பாளையம், ... டபுரம் போஸ்ட். ...ாச்சி

10 சி. தங்கவேல், ஜ... தேவம்பாடி அஞ்சல், பொள்ளாச்சி

11 கே. பாலசுப்பிரமணியம், குமாரபாளையம், எம். ஜி. புதூர் போஸ்ட். (பொள்ளாச்சி)

12 லலிதா ராமமூர்த்தி, 39, குல்லூர்சந்தை ரோடு, (கனகலட்சுமி ஆயில் மில்ஸ் காம்பவுண்ட்) முத்துராமன்பட்டி, விருதுநகர்-2.

13 ஏ. வி. ஹரிகோவிந்தன், 26, லெட்சுமிபுரம் 2வது தெரு, பாலஸ் போஸ்ட், மதுரை.

14 கே. ஜி. ஜனார்த்தனன், 13, இஸ்மாயில்புரம் 3வது தெரு, முனிச்சாலை ரோடு, மதுரை-9.

15 ப. அசோகன், நிர்வாகி, ராஜன் பப்ளிசிடி, 33-ஏ, சித்திரக்காரத்தெரு, மதுரை-1.

ஆதரவாளர்கள்!

அரசியலில், ஆதரவாளர்கள் என்ற ஒருசொல் அடிபடுகிறது. ஆதரவாளர்கள் என்றால் தன் சுயகாரியத்திற்காக ஒரு கட்சியைக் காக்காய் பிடிப்பவர்கள் என்று அர்த்தம். அவர்கள் உண்மையான கட்சி ஊழியர்களாக இருக்கமாட்டார்கள். அவர்களை நம்பக்கூடாது.

—பெரியார் ஈ. வெ. ரா.

சிறந்த சரக்கு உற்பத்தி!

சிறப்பான

பொதுஜன ஆதரவு!!



50 குச்சி

கோபுரம்

தீப்பெட்டிகள்

தரத்தில் நிகரற்றவை!

★

சிம்கோ — சிவகாசி

பூ மார்க்

பூ உலகில் புகழ்பெற்ற

பூ மார்க் பீடி

G.S. மு

பூ உலகில் புகழ்பெற்ற

பூ மார்க் பீடி

G.S. முத்தையா & பிரதர்.

ஆசிரியரும், அச்சிட்டு வெளியிடுபவரும் நா. சதானந்தம்,
சதானந்தா அச்சகம்—48, கீழக்கடைத் தெரு—விருதுநகர்.